உ

வாழ்க உலகெலாம்

ஞானசம்பந்தம்

[தருமை ஆதீனத் திங்கள் வெளியீடு]

மலர் 20 } பிலவ - ஆனி 10—7—61 { இதழ் 8

உ
திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

உலகம் உணருமா?

உலகம் மாறிவிட்டது என்கின்றார்கள் பலர்; உலகம் மாறவில்லை உள்ளந்தான் மாறிவிட்டது என்றுரைப்பாரும் பலர்; உலகமும் மாறவில்லை உள்ளமும் மாறவில்லை; எண்ணுவோர் மனநிலையில்தான் இவற்றின் மாற்றம் உள்ளன என்று அமைதி உரைப்போரும் சிலர். மாறிவிட்டதெனத் தோன்றும் இந்நிலைக்குப் பலகாரணங்கள் கூறப்பட்டாலும் முதற்காரணம் ஒன்றேயாகும். அமைதியோடு வாழும் தென்னாட்டிலும் துயர்கொடுக்கும் பல நிலைகளைக் காண்கின்றோம். வெள்ளமும் நிலச்சரிவும் தென்னாடு கண்டறியாதவை என்றே கூறலாம். ஆனால் இப்போது, நினைத்தாலும் மனம் குமுறக்கூடிய அளவில் இவை நிகழ்ந்துள்ளன;

நிகழ்ந்து வருகின்றன. மக்களினம் மருண்டு நிற்கின்றது. இயற்கையின் சினம் தணியாதா? வெறி நீங்காதா? அமைதி நிலவாதா? என்ற எண்ணம் எங்கும் நிலவுகின்றது.

இக்கவலைகளைப்போக்க எது மெய்யான வழி? மேலும் மேலும் அதிகமான அளவில் பெய்யும் மழையை மனித முயற்சி தடுத்துவிட முடியுமா? முடிகிறதா? முன்னேற் பாடுகளால் நிலச்சரிவை நிறுத்த முடியுமா? முடிகிறதா? இவ்வினாக்களைக் கேட்டால் இல்லை என்ற விடையே கிடைக்கும். இறைவன் திருவருள் நோக்கி நம் சிந்தனை யெல்லாம் திரும்பவேண்டும். அது ஒன்றே நம்மைத் துயரச் சுமையிலிருந்து காப்பாற்றவல்லது; துன்பக் குவியலி லிருந்து நீக்கி இன்பத் துணையாக நிற்பது. இந்த நம்பிக்கை உறுதியாக இருத்தல் வேண்டும். மனத்தூய்மையோடு வழிபாட்டினைப் பிறழாமல் இயற்றிவரல் வேண்டும். அப்போதே இக்கவலைகளினின்றும் விடுபடலாம்.

இத் தருமையாதீனக் குருபீடத்தில் இருந்தவர்கள் பெருமழை தடுத்துப் பேரருள் விளக்கம் காட்டியவர்கள் என்பதை ஆதீன வரலாறு கூறும். 'வானங்காள் பெய்க மழை' என்று கூறிப் பெய்விக்கும் ஆற்றலும் அவர்களுக் கிருந்தது. திருவருள் ஒன்றே பற்றுக்கோடாக வாழும் பேரருளாளர்கள் ஆதலால் அவர்கள் விண்ணப்பம் ஆண்ட வன் உள்ளக் கனிவுக்கு ஏதுவாகிறது.

இன்றைய சூழ்நிலையில், உலகச்சூழ்நிலையிலும் சரி, நம் இந்திய நாட்டுச் சூழ்நிலையிலும் சரி அமைதியற்ற - தெளிவு இல்லாத - அச்சம் கலந்த - அறத்தோடு முரணான - ஒரு நிலை நிலவிவருதல் கண்கூடு. இந்நிலைமாறி அச்சம் நீங்கி, அறத்தின்மேல் உறுதி நிலைத்து, சமயவாழ்வு தலைப்பட்டு அமைதி நிலையில் தெளிவுகாண மெய்யான கடவுள் வழி பாடும். தெய்வ நம்பிக்கையும் உலகெங்கும் உறுதிப் படுதல் வேண்டும். உலகம் இதனை உணருமா? இறை வழிபாடு பெருகுமா? நல்லருள் தழைக்குமா? எங்கும் தெய்வ வழிபாடு செழிக்குமா? என்பதே அறநெறி நிற்கும் சமயத் தலைவர்களின் இன்றைய சிந்தனை.

சிவ ஞான போதம்

கட்டுரை 29

முதுபெரும் புலவர்

முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்

(மலர் 20, இதழ் 7, பக்கம் 393 இன் தொடர்ச்சி)

1. உணர்த்த வுணர்தலின் ஆன்மா உளது. (சிவ ஞானபோத மூலம்)

2. அவன் அறிந்தாங்கு அறிவன் என்று அறிவிக்க அறிந்து உபதேசியாய் நிற்பது உளது ஆகலின், அதுவே அவ்வான்மாவாம் என்றது. (பொழிப்புரை)

3. (1) அறிந்தும் அறிவதே ஆயும் அறியா (2) தறிந் ததையும் விட்டங் கடங்கி - (3) அறிந்ததேது (4) அறிவும் (7) அன்றாகும். (5) மெய்கண்டான் ஒன்றின் (6) அது அதுதான் என்னும் அகம்' (சிவஞானபோதவெண்பா)

விஞ்ஞானன்மவாதி தடை :- பிரமப்பொருள் சடப் பொருள்கள் போல்வது அன்று, சித்துப்பொருளே ஆகும். ஆதலால், அச்சித்தே உயிராதல் கூடும்.

விடை :- கேவலாவத்தையில் அதீதமாய் நிற்குங்கால் ஒரு கருவியும் தொழிற்படாது. படாமையால் அறியுமாறு இல்லை. பின்னர் தலை முதலிய கருவிகள் கூடலால், அக் கருவிகளின் சார்பால் அறிவிக்க அறிந்து வருகின்றன உயிர்கள். கேவலத்தில் அறியாமையும் சகலத்தில் அறித லும் உள்ளன. அவ்வுண்மையால், எக்காலத்திலும் திரிபில்லாமல், மறந்து மறந்தறியாமல் அறிந்தாங்கு அறிந்து நிற்கும் சித்துப் பொருளாகிய பிரமத்திற்கும் அறியாமையும் அறிதலும் மாறிமாறி நிகழப்பெறும் உயிர்க்

கும் வேறுபாடிருத்தல் நன்கு புலப்படும். படவே பிரமத்தின் வேருக அங்கனம் உணரும் ஆன்மா உண்டு என்றுணர்க.

தடை :- உணர்தலின் ஆன்மா உளது என்னுது உணர்த்த உணர்தலின் ஆன்மா உளது என்றது ஏன்?

விடை :- முன் உணராது கிடத்தல் பேறற்போருட்டு அங்கனம் கூறலாயிற்று. 'உணர்த்த' என்னுரேல் 'உணர்தல்' என்றும் உண்டு என்று கோள்ளலும் கூடும்.

தடை :- இங்கு ஆன்மாவின் உண்மையைச் சாதித்தது ஏது?

விடை :- உணர்த்த உணர்தலின் என்னும் ஏதுவே சாதித்தது.

தடை :- அவ்வேதுவால் துணியப்பட்ட போருள் என்ன?

விடை :- ஆன்மா (பிரமத்தின் வேருக) உளது என் பது துணியப்பட்ட போருள்.

தடை :- 'கேவலாதீதம்' என்றது எதனுற் பேற்றது?

விடை :- முன் அறியாது நின்றமையால் கருவிகளின் கூட்டம் இன்மையும் கேவலதுரியாதீதமும் பேறலாகும்.

தடை :- அறிந்தாங்கு அறிவதாகிய பிரமப்போருள் அவித்யாகாலத்தில் கருவிகளோடும் கூடி அன்றி அறியாது எனக் கோள்ளுதும் ஆகலின், அதுபற்றி உயிர் வேறு உளது என்று கோள்ளுதல் போருந்தாது.

விடை :- 'அவ்வளவில் அவன் மகிழ்க' என்பது நியாயங்களுள் ஒன்று. அந்த நியாயத்தால், வேறும் அதன் தாற்பர்யம் உமக்கு உணர்த்துதும். உயிர் கருவிகளோடு கூடிய வழியும் தன்னியல்பு உணருமாறு இல்லை. அவ் வுயிர்போல அம்முதல்வன் மறந்து மறந்து அறிவதில்லை;

அறிந்தவாறே அறிந்து நிற்கும் பேரறிவுடையவன்முதல்வன். இவ்வுண்மையை வேதாகமங்களால் அறிவிக்கஅறிந்து ஆசிரியன் அறிவுறுக்கும் உபதேச வாக்கியத்தைப் பேற்றுடையதாய் நிற்பது ஒன்று உளது. ஆகலின் அதுவே, முன் ஆகமப்ரமாணத்தால் சாதித்துப் போந்த ஆன்மா. இக் கருத்தே உணர்த்த உணர்தலின் ஆன்மா உளது என்பதால் அறிவிக்கப்பட்டது.

தடை :- 'அறிந்தாங்கு அறிதல்' என்பதற்கு விளக்கம் வேண்டும்.

விடை :- 'எண்ணிய எண்ணியாங்கு எய்துப' என்னுந்திருக்குறள் வாக்கியம் போதுமே.

தடை :- 'அறிந்தாங்கு', 'எண்ணியாங்கு' என்பவை போலப் பல தமிழில் அமைந்ததன் (சொல்) ஆராய்ச்சி சிறிது இங்கு நிகழ்தல் நன்று.

விடை :- 'பட்டாங்கில் உள்ளபடி' 'பட்டாங்கு கூறுதற்கண் வந்தது' (சிந்தாமணி 1364. உரை) "கதத்தானுதல் களியானுதல் மயங்கி இன்னுங்கு உரைத்தும் பின் தேருண்டவழி, அவ்வின்னுங்கு உரைக்கப்பட்டான், 'நீ என்னைவைதாய்' என்றக்கால் 'யான்வைதேனே' எனத் தான் வையாமையை வலியுறுத்தற்குக் கூறியதுதானே' 'அப்பொழுது வைதேன்; நோகாதே' என்று நேர்ந்தமையடைநிற்கும்.'' (தொல். சொல். கல்லாடருரை) 'இன்னுங்குரைத் தான்...இன்னுங்குரையாமை' (நச்சினார்க்கினியம்) புரைதீரா மன்னு இளமை மகிழ்ந்தாரே கோலூன்றி இன்னுங்கெழுந் திருப்பார்' (நாலடியார் 11) 'தளிர்மேலே நிற்பினுந் தட்டாமற் செல்லாவுளிநீரர் மாதோ கயவர் - அளிநீரார்க், கென்னுனுஞ் செய்யார் எனைத்தானுஞ் செய்பவே இன்னுங்கு செய்வார்ப் பேறின்' (நாலடியார் 355) என்பவற்றுலும் 'கனிய நினை வோடு நாள்தோறுங்காதற்படும் அடியார்க்கினியன் இனி ஒரு இன்னுங்கிலம்...........யானை முகத்தவனே' (கபிலர் அருளிய இரட்டைமணிமாலை 6) 'கற்றுங்கேரியோம்பிக்

கலியை வாராமேசெற்ருர்' (திருஞானசம்பந்தர்) என்பவற்ருலும் அன்னவகைத் தொடர் தமிழில் வழங்குதல் தொன்மரபு, பட்ட ஆங்கு, எண்ணிய ஆங்கு, இன்ஞ ஆங்கு, கற்ற ஆங்கு எனப் பிரிந்து நின்று பட்டவாறு, எண்ணியவாறு, இன்ஞத ஆறு, கற்றவாறு என்னும் பொருள்பயத்தல் அறிக. இன்ஞங்கு என்பது துன்பம் என்னும் கருத்தைப் பயக்கின்றது. 'பொல்லாங்கென்பவை யெல்லாந்தவிர்' எல்லார் கருத்தும் இதமா உரைக்கறியேன், நல்லாங்கு தீங்கிதென நாடறியேன்' (சொக்கநாத வெண்பா 53) என்பவற்றின் வரும் 'பொல்லாங்கு' 'நல்லாங்கு' என்னும் தொடரமைதியும் அறியற்பாற்று.

சிவஞானபோத வெண்பாப் பொருள்

தடை :- கருவிகளோடு கூடிய வழியும் (அவித்யா என்பதன் திரிபாகிய) அவிச்சை நீங்காமையால், புலன்களை மட்டும் அறியுமே அன்றித் தன்னியல்பை அறியுமாறு இல்லை. அவ்வியல்பு உபதேசத்தால் அறியற்பாலதே ஆகும். ஆதலால், அதுபற்றி இழுக்கு என்னை ?

விடை :- (ஈண்டு முற்கூறிய நியாயத்தால் அதையும் உடன்பட்டுக் கூறும் மற்றும் ஒரு தாற்பரியம் என்றும், அவன் அறிந்தாங்கு அறியுமாறும் உயிர் மறந்து மறந்து அறியுமாறும் தெரித்துணர்த்தி வலியுறுத்துதல் நுதலிற்று எனினும் அமையும் என்றும் மாதவச் சிவஞானயோகிகள் உரைத்தருளினர்).

(1) அறிந்தும் அறிவதே ஆயும் அறியாது - (கருவிகள் எல்லாவற்ருேடும் கூடிச் சாக்கிரத்தானத்தில் நின்று விடயங்களை அறியுமிடத்தும் ஒருங்கே அறியமாட்டாது) ஒன்றனையே அறிந்தும் ஒன்றனை அறியப் புகுவதாயும் முன் அறிந்ததொன்றனை அறியாதொழிந்தும்,

(2) அறிந்ததையும்விட்டு அங்கு அடங்கி - (இங்ஙனம் ஓரோவொன்ருக) அறியப்பட்ட விடயத்தையும் (இடையீ

டின்றி அறியமாட்டாது) விட்டுவிட்டு ஆங்கே ஐந்தவத்தைப் பட்டு அடங்கி

(3) அறிந்தது எது - (மீள அறிந்துவருதல் கண் கூடாகக் காணப்படுதலால்) அங்ஙனம் அறிந்துவந்த பொருள் யாது ? அது (சடம் அன்று என்பது மேற்காட்டப் பட்டது முன்னரும் காட்டப்படும்)

(4) அறிவும் அன்று - ஒன்றுக(வும்) இயல்பாக(வும்) உணர்தலே பேரறிவாகலின் அதுவும் அன்றும்.

(5) மெய்கண்டான் ஒன்றின் - (இனி) மெய்யாகிய சித்தாந்தநெறியினை உணர்ந்தோன் (வேறு என்னையோ என மனம்) ஒருங்கி ஆராயும் ஆயின்,

(6) அது அது தான் என்னும் அகம் (7) ஆகும் - காட்டும் ஒளிக்கு வேருய கண்ணெளிபோல அவ்வறிவிற்கு வேருய் அதுவதுவே தானெனச் சார்ந்ததன் வண்ணமாய் நின்று அறியும் இயல்பையுடைய உயிராம்.

'அறிந்தும்' 'ஆயும்' என்னும் உம்மைகள் எண்ணும்மை என்றும் 'அறியாது' என்பதில் அது தொக்கது என்றும் 'அறிந்ததையும்' என்பதில் இழிவு சிறப்பித்தது என்றும் 'அறிவும்' என்பதில் இறந்தது தழீஇயிற்று என்றும் 'அறிவதே' என்றதில் உள்ள ஏகாரம் அசைநிலை என்றும் முனிவர் உரை விரித்தது. அங்கு - உணர்த்தும் முறைமைத் தானமாகிய இலாடத்தில்.

அறிந்ததையும் விட்டு அங்கு அடங்கி அறியுமாற்றை நாலாவது சூத்திரத்தின் ஈற்றிலும் அது அது தான் எனச் சார்ந்ததன்வண்ணம் ஆமாற்றை உண்மையதிகாரத்திலும் அறியலாம்.

இவ்வெண்பாவின் முற்பாதிக்கு ஓதியதனை ஓதிய பொழுதே உணர்ந்தும், பலகால் ஓதிஉணர்வதாயும், பலகால் ஓதியும் உணர்தல் இன்றியும், உணர்ந்ததனையும் பின்னர்

மறந்தோழிந்தும் இவ்வாறு ஓதியுணர்ந்தது யாது என்று உரைத்தலும் ஒரு போருள். இப்போருட்கு அடங்கியும் என்று எண்ணும்மை விரித்துக்கோள்க என்பதும் அவர் அருளிய உரையே.

இவ்வாறு மூவகைப்படுத்து உரைக்கவே, உணர்த்த உணர்தல் என்னும் ஏதுவால் முறையே, (1) அதீதத்தின் கண் நிகழும் இயல்பும், (2) சுத்தத்தின்கண் நிகழும் இயல்பும், (3) உணர்த்தும் முறைமைக்கண் நிகழும் இயல்பும்பற்றி உயிருண்மை சாதிக்கப்பட்டது. இது 'தற்பரமும் அல்லே' என்றதனே வலியுறுத்தியவாற்றை உணர்க. தற்பரமாகிய பதியின்வேருய்ப் 'பசு' உண்மை உணர்த்திற்று இவ்வதிகரணம். வீஞ்ஞானமே ஆன்மா என்னும் புத்தருள் ஒருதிறத்தாரான யோகாசாரன் மதத்தை மறுத்தற்கு இவ்வதிகரணம் எழுந்ததாகக்கோண்டு அதற்கு இயைய உரைகூறுவாரும் உளர்.

(தோடரும்)

<u>மதிப்புரை :</u>

சிவஞானசித்தியார் - சுபக்கச் சூருக்க விஞவிடை

[ஆசிரியர் : சுத்தாத்துவித சைவசித்தாந்தப் பேராசிரியர், திரு, சபா. சிவப்பிரகாசம் பிள்ளை, கிடைக்குமிடம் ; ஆசிரியர், 12 பழஞ்சாலியத்தெரு. சிதம்பரம். பக்கங்கள் 225 விலை ரூ,2--50]

இந்நூலாசிரியர் பன்னெடுங்காலமாகச் சித்தாந்தசாத்திரப் போதகாசிரியராய் விளங்கி வரும் அநுபவம் மிக்கவர்கள் ஆதலின் இவ்விஞவிடைநூல் மிக எளிதாய் நன்கு விளங்குகின்றது. சென்னை அறநிலையங்களின் முன்ஞள் ஆணையர் திரு. உத்தண்டராம பிள்ளை யவர்களால் துறையூர் அருணந்தி சிவாசாரியார் திருமுன்னரே அரங்கேற்றப் பெற்ற பெருஞ்சிறப்புடையது. இந்நூல், எளிய நடையில் பாடற் பொருள்களை இளஞ் சிறுவர்களும் விளங்கிக் கொள்ளும் முறையில் நன்கு உதவி யுள்ளார் இவ்வாசிரியர். இளமைமுதலே இவற்றையனைய நூல்களைப் பயின்று சமயநெறி நிற்றல் சைவ இளைஞர் கடன். நல்லதிருப்பணி, பாராட்டிற்குரிய நலம் செறிந்தது. —சொ. சிங்காரவேலன் B.A.

திருக்களிற்றுப்படியார்

பண்டித வித்துவான், கு. சுந்தரமூர்த்தி

ஞானபீடம் :— செந்தமிழ் மணமும் சிவமணமும் பூத்து விளங்குவது நம் தமிழகம். தமிழ் மணத்தில் சிவமணமும் சிவமணத்தில் தமிழ்மணமும் ஒன்றித்து விளங்குகின்றது. இது நமக்கே வாய்த்த வாய்ப்பு. தமர நீர்ப்புவனம் முழுதொருங் கீன்றுள் தடாதகா தேவியேன் றொருபேர் தரிக்க வந்தாள். தனி முதல்வனும் இறைவன் சௌந்தர மாறன் என்னும் பெயருடன் வந்தான். குமரவேள் உக்கிரப் பெருவழுதியாக வந்தான். எதற்கு? தமிழ் மணத்தைக் கூட்டாக நுகர்ந்து இன்புற. இதனைச் சிவமணம் பூத்த அருந்தமிழ் வள்ளல் குமரகுருபர அடிகள் தம் மதுரைக் கலம்பகத்தே குறிப்பிடுகின்றார்கள். தமிழ் மணமும் சிவ மணமும் ஒருங்கு கமழ்வது நம் தமிழகம் என்பதற்கு இதனினும் வேறு சான்று வேண்டுமோ? இதனால் தான் புவனியில் போய்ப் பிறவாமையில் நாள் நாம் போக்கு கின்றோம் அவமே! இந்தப் பூமி சிவன் உய்யக் கொள்கின்ற புண்ணியமுடையது என விண்ணவர்களும் விரும்பலானார்கள். இத்தகைய ஞான பூமியிலே பிறந்த உயிரினங்கள் அத்தனையும் உய்திபெறவேண்டும். பேரா இயற்கைப் பெருவாழ்வில் திளைத் தல் வேண்டும் என்பது இறைவனின் திருவுள்ளம். அவ்வருள் உணர்ச்சியின் விளைவே பாரம்பரியமாக வரும் திருக்கைலாய பரம்பரையாகும். அத்தகைய ஞானபீடத் தமர்ந்தருளி ஞானச் செங்கோல் ஒச்சியருளிய அருளாளர்கள் பலர். அவர்களின் வழிநின்று ஞானப் பேரரசினை நாடெல்லாம் நிலைநாட்டி அருள் ஊட்டிவரும் நம் தருமைக் குருமணியாம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் நாம் உய்ய எழுந்தருளிய பேரருளாளர் ஆவார்கள்.

'கயிலை மால்வரையாவது காசினி மருங்கு பயிலும் மானுடப் பான்மையோர் அடைவதற் கெளிதோ? இல்லை! ஆதலின் முனிவரே! மீளும் அத்தனை உமக்கினிக் கடன்'

என இறைவன் அருளினன். ஆயினும் அம்முனிவர் கூறியது என்ன ?

"ஆளும் நாயகன் கயிலையில் இருக்கைகண் டல்லால் மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன் " என்பது. இவ்வரலாற்று நிகழ்ச்சி.கி. பி. 7ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்தது. திருத்தொண் டின் உறைப்பாலே வென்று வாழ்ந்த பெருந்தகையாம் திருநாவுக் கரசர் வரலாற்றில் காண்பது; திருவருட் செயலால் திருநாவுக் கரசருக்குத் திருவையாற்றில் அப்பேறு கிடைத்தது. அத்த கைய வரலாற்றைப் புதுக்கி அப்பெருமானே தன் தள்ளரும் பருவம் விடுத்து பிள்ளைமை எய்தியதுபோன்று ஆளும் நாயகன் கயிலையின் இருக்கை கண்டு சிவாநுபவத்தில் திளைத்தது நம் குருமணி ! நம்மனோரையும் அப்பெரு வாழ்விற்கு ஈர்த்து ஈர்த்து ஆட்கொள்கின்றது. அக் குருமணியின் திருவருளுக்கு ஆளாத லன்றி என்ன கைம்மாறு செய்ய இயலும் ? அவர்களை எங்ஙனம் பாராட்டவேண்டும் ? பொன்போற் போதிந்து கொள்ளுதல் வேண்டும். திருவள்ளுவர் காட்டிய நெறியன்றோ இது. கனகாபிஷேகம் செய்து கண்ணினால் அவர்களின் நல்விழாப் பொலிவும் கண்டோம். மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் ஈது. இங்ஙனம் ஆட்கொள்ளும் திருவருளையும் குருவருளையும் நினைந்து அந்நினைவின் வண்ணம் திருக்களிற்றுப் படியார் என்னும் நூலிற்குள் செல்வது அடியேன் விருப்பம்

உச்சியிற் பழுத்தது :— பழுத்திருப்பது கனி. அதன் சாரத்தைப் பருக வேண்டுவன உயிரினங்கள். எனினும் கனி யிருப்பக் காய்கவரும் சிந்தனையே பலருக்கு எழுந்தது. சில ருக்கோ கனியுண்ணும் சிந்தனை பிறந்தது. அக்கனியைத் தாமும் உண்டு பிறரையும் உண்ணச்சேரவாரும் சேகத்தீரே ! என்று அழைத்தார்கள் அவர்கள். அவர்கள் யார் ? அவர்களே சாத்திர தோத்திரங்களை அருளிச் செய்தவர்கள் ஆவார்கள். இவர்களை " ஒரும் வேதாந்தத்து உச்சியிற் பழுத்த ஆராவின்ப அருங்கனி பிழிந்து சாரங்கொண்ட சைவ சித்தாந்தத் தேனமுது அருந்தினர் சிலர் " என்பர் குமரகுருபரர். அவர்களுள் ஒருவர் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் ஆவர்.

ஆசிரியர் :— திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் திருவியலூர் ஆளுடைய தேவநாயனாரிடத்து உபதேசம் பெற்ற

வர். அவர் திருவுந்தியாரின் ஆசிரியராகிய திருவியலூர் உய்ய வந்த தேவ நாயனுரிடத்து உபதேசம் பேற்றவர் ஆவர். திருவியலூர் ஆளுடைய தேவநாயனுர் தமது பெருங்கருணையால் தம் மாணுக்கருக்கும் தமது திருநாமத்தையே சூட்டி உபதேசித் தருளினுர். இவ்வுண்மையைத் திருக்களிற்றுப்படியார் ஆசிரிய ராகிய திருக்கடவூர் ஆளுடைய தேவநாயனுரே

"ஆளுடையான் எந்தரமும் ஆளுடையானே அறியும்
தாளுடையான் தொண்டர் தலைக்காவல் — நாளும்
திருவியலூர் ஆளும் சிவயோகி இன்றேன்
வருவிசையை மாற்றிஞன் வந்து."

எனக் கூறுமாற்ருன் அறியலாம். 'வந்து ஆளுடையான்' என்பதால் இறைவனே புவனியிற் சேவடி தீண்டி, ஆளுடை யான் என்ற திருநாமத்துடன் வந்து ஆட்கொண்டான் என்பதும்; 'எந்தரமும் ஆளுடையான்' என்பதால் தனது சிறுமையை அவனது பெருமையாற் பொறுத்து அருளியவன் என்பதும்; 'சிவயோகி' என்பதால் சிவாநுபவத்தில் ஒன்றிரண்டு மறத் தோய்ந்தவர் என்பதும்; 'வருவிசையை மாற்றிஞன்' என்பதால் தன்னை இப்பவத்திற் சேராவகையெடுத்து ஆட்கொண் டருளிஞன் என்பதும்; 'தோண்டர் தலைக்காவல்' என்பதால் மாயப்படை வராமல் அனைத்துயிர்களையும் ஆட்கொண்டருளும் இயல்பினர் என்பதும் 'திருவியலூர்' என்பதால் ஆசிரியர் அவதரித்த திருத்தலமும் விளங்குகின்றன. இவர்தம் காலம் 12ம் நூற்றுண்டின் பிற்பகுதி என்பர். ஞான சாத்திரம் பதினுன்க னுள் திருவுந்தியாரும் இதுவுமே காலத்தால் முந்தியதாகும்.

நூல்வழியும் மாண்பும் :- இந்நூலைத் தில்லைவாழந்தணர் கள் அங்கீகரிக்கவில்லை என்றும், அந்நூல் தில்லையம்பலத்தி லுள்ள பஞ்சாக்கரப் படியின்கீழ் வைக்கப்பட்டதென்றும், உடனே அப்படியில் செதுக்கப்பட்டிருந்த யானை தனது துதிக் கையை நீட்டி அந்நூலை எடுத்துத் தில்லைத் திருக்கூத்தன் திருவடியில் வைத்ததென்றும், இதனுல் அந்நூல் திருக்களிற்றுப் படியார் என்ற காரணப்பெயர் பெற்றதென்றும் ஒரு பழைய வரலாறு கூறுகின்றது. இவ்வரலாற்றுண்மை எதுவாயினும் நூலின் பெயர்க்காரணத்தை அறிய இது ஏதுவாகின்றது. திருவுந்தியாரின் வழிநூலாய் அதன் விளக்கவுரையாய்த் திகழ்வது இந்நூல் எனலாம். எடுத்துக்காட்டாக ஒன்று:

முத்தி முதலுக்கே மோகக் கொடிபடர்ந்து
அத்தி பழுத்ததென் றுந்தீபற
அப்பழ முண்ணுதே யுந்தீபற. —திருவுந்தியார்.

முதல் என்பது காரணம் என்னும் பொருளில் வந்தது. "என்வாழ் முதலாகிய பொருளே" என்பதுபோல. எனவே முத்திமுதல் என்பது முத்தியைப் பெறுதற்குக் காரணமானஉயிர் என்று பொருள்படும். அவ்வுயிர் முத்தியைப்பெற உரிமையுடையது எனினும் அதற்குத் தடையாக இருப்பது மலமாகும். மலத்தின் விளைவாக வரும் அறியாமையே மோகம் எனப்படும். உயிர்க்கொடி இம்மோகக் கொடியோடியைந்து கிடப்பதால் விளைகின்ற பழம் அத்திப்பழம் ஆகும். அது உடல் என்ற பொருளைக் குறிக்கும். எனவே உயிர் ஆணவமலத்தின் விளைவால் வந்த அறியாமையோடு இவ்வுடலை எடுக்கின்றது. இவ்வுடலை மிகையென எண்ணிப் பிறப்பறுக்க முயல்க என்பதே கருத்தாகும். உடல் விளைவு கூறப்படுகின்ற இப்பாடலில் அதனை அறுக்கும் உபாயத்தைக் குறிப்பிடவில்லை. அவ்வுபாயத்தையும், இப்பாடல் கருத்தையும் கொண்டு விளக்கவுரைபோலத் திகழ்வதே பின்வரும் திருக்களிற்றுப்படியார் ஆகும். அப்பாடல் வருமாறு :

முத்தி முதற்கொடிக்கே மோகக் கொடிபடர்ந்து
அத்தி பழுத்தது அருளென்னும்—கத்தியினல்
மோகக் கொடியறுக்க முத்திப் பழம்பழுக்கும்
ஏகக் கொடியெழுங்காண் இன்று.

உயிராகிய கொடியுடன் அறியாமையென்னும் ஆணவக்கொடி படர அத்திப்பழமாகிய உடல் பழுத்துவருகின்றது. அதனைக் குருவருளால் உணர்ந்து அவர்தம் திருவடிப்பேற்றால் இந்திரியம் நாம் அல்ல, அவை நம் வழியுமல்ல. நாமும் அரனுடைமை என்னும் உணர்ச்சி பேற்று இறைவன் பொருள்சேர் புகழிலேயே சிந்தனையைச் செலுத்த ஆணவக்கொடி அற்றுவிடும். அப்பொழுது முத்திக்குக் காரணமான உயிர் தனக்கே உரித்தான முத்திப்பழத்தைப் பெறும். முத்திப்பழம் பெறுகை என்பது சிவன் என்றும் உயிரேன்றும் இரண்டாக இல்லாமல் மெய்ஞ் ஞானத்தாணுவினேடு அத்துவித மாதலாகும். இங்ஙனம் அமைந்த பாடல்கள் பலவுள. விரிவு அஞ்சி ஒன்றே எடுத்துக் கொள்ளப்பட்டது.

(தொடரும்)

திருவிசைப்பா

தருமையாதீனப்புலவர்
வித்துவான் வை. குஞ்சிதபாதம் பிள்ளை

சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் திருவிசைப்பா ஒன்பதாம் திருமுறையாக விளங்குகின்றது. இத்திருமுறையினை இயற்றியோர் திருமாளிகைத்தேவர், சேந்தனர், கருவூர்த் தேவர், பூந்துருத்தி நம்பிகாட நம்பி, கண்டராதித்தர், வேணுட்டடிகள், திருவாலிய முதனர், புருடோத்தம நம்பி, சேதிராயர் என்னும் ஒன்பதின்மராவர்.

இவருள் கண்டராதித்தர் சோழ மன்னராகவும், சேதிராயர் குறுநில மன்னராகவும் விளங்கியவர். திருவாலியமுதனர், புருடோத்தம நம்பி ஆகிய இருவரும் முதலில் வைணவராக விருந்து பின்னர் சிவபரத்துவமறிந்து சிவனையே வழிபட்டுப் பாடியவர். ஏனைய ஐவரும் சிவஞானிகளாகத் திகழ்ந்து சிவனையே பாடியவர். இவ்வொன்பதாந் திருமுறையைச்சேர்ந்த திருப்பல்லாண்டுப் பதிகமொன்றைப் பாடியவர் சேந்தனர். ஒன்பதாந் திருமுறையை ஒன்பதுபேர் பாடியிருப்பது மிகவும் பொருத்தம்.

திருவிசைப்பா திருவாசகம், திருக்கோவையார், திருக்குறள் என்பதுபோலத் 'திரு' என்னும் அடைமொழியோடு விளங்குவது ஒரு சிறப்பாகும். பொதுவாக நோக்குமிடத்து திருவிசைப்பா என்பதற்கு அழகிய இசைப்பாடல் என்பது பொருள். சிறப்பாக நோக்குமிடத்து இறைவனது புகழைக் கூறும் பாடல் எனப்பொருள் கொளல் பொருந்தும். 'ஈதல் இசைபட வாழ்தல்' என்னுங் குறளில் 'இசை' என்னுஞ் சொல் 'புகழ்' என்னும் பொருளில் வருதல் காண்க. மக்களைப் புகழ்ந்து கூறும் பாக்கள் திருவிசைப்பா எனப்படா. ஏனெனில்? இறைவன் புகழே பொருள்சேர் புகழ் - உண்மைப்புகழ்; ஏனையோர் புகழெல்லாம் பொய்ப்புகழ் - பொருள்சேர் புகழாகா. திருவள்ளுவரும் 'இறைவன் பொருள்சேர் புகழ்' என்ருர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளும் ''பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்'' என்று அருளிச் செய்வாராயினர். மற்றும் ஓதுவார் உள்ளத்தை இறைவனிடம் இசைவிக்கும் ஒன்றச் செய்யும் பாவுமாம்.

முதல் எட்டுத்திருமுறைகளும் ஏற்றமுடைய பண்டைத் தமிழிசையின் பெருமையினை எட்டுத் திசையிலும் எடுத்தியம்பி வருதலல்லாமல் ஒன்பதாம் முறையாக திருவிசைப்பா இசைப் பெயர்கொண்டு வழக்கிலிருத்தல் காண்க. வேறெங்குங் காணப் படாத 'சாளரபாணி' என்னும் பண்ணைப் பூந்துருத்தி நம்பி காடநம்பி என்பார் தாம் பாடிய திருவிசைப்பாப்பதிகத்தில் அமைத்துப் பாடியிருப்பது திருவிசைப்பாவின் சிறப்பைக் குறிப்பதென்க.

திருவிசைப்பா ஆசிரியர்களுள் முதலாமவராகவுள்ள திருமாளிகைத்தேவர் சைவர்களுக்கு முதல் திருக்கோயிலாக விளங்கும் தில்லையம்பலத்தில் எழுந்தருளியுள்ள தில்லையம்பலக் கூத்தன்மீது நான்கு பதிகங்கள் பாடியுள்ளார். இவர் பாடல்களில் தேவார திருவாசகக் கருத்தமைந்த சொற்களும் சொற்றொடர்களும் கலந்து மிளிர்கின்றன.

இவர் அருளிய கோயில் முதல் திருப்பதிகத்தில் உள்ள பதினொரு பாடல்களின் இறுதியிலும் முறையே 'தொண்டனேன் விளம்புமாவிளம்பே, பணியுமாபணியே, உரைக்குமாறுரையே, நணுகுமா நணுகே, இசையுமாறிசையே, நுகருமாநுகரே, புணருமா புணரே, தொடருமாதொடரே, விரும்புமா விரும்பே, நினையுமா நினையே என்று அருளியிருப்பது இறைவன் திருவருள் துணையின்றி ஆன்மாவின் செயல் ஒன்றும் நிகழாது என்னும் சைவ சித்தாந்தக் கருத்தைத் தெளிவுபடுத்துகின்றது. 'அவனருளாலே அவன்றாள் வணங்கி' என்றார் மாணிக்கவாசகரும்.

திருமாளிகைத்தேவர் தில்லையுட் கூத்தனைக்கண்டார். எவ்விதங் கண்டார்? ஒளிவளர் விளக்காகக் கண்டார்; அழியாத உண்மைப் பொருளாகக் கண்டார்; சிற்றுணர்வுக்கெட்டாத ஞானவடிவினனென்றுணர்ந்தார்; பவளம்போல் மேனியில் பால் வெண்ணீறணிந்து விளங்கும் அம்பலக்கூத்தனைத் தெளிவான பளிங்கு மலையாகப் பார்த்தார்; சட்டோ நினைக்கமனத்

தூறுஞ்சங்கரனைத் தேனும் இன்னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவ பெருமானை உள்ளத்துள் இனிக்குந் தேனாக பருகினார்; சிவ யோகிகள் உள்ளத்துப் பவளநிறம் பெற்றுத் தவளநீறு பூசிப் பையப் பையப் பழுத்து விளங்குந் தெய்வக்கனியெனக் கண்டார்; உலகம் உய்யும்பொருட்டுப் பொன்னம்பலத்தை ஆடுமிடமாகக் கொண்டு சிதாகாயத்தில் ஆதியும் அந்தமுமில்லா அருட் பெருங் கூத்தியற்றுவதைக் கண்டார். கண்டு, பெருமானே அடியேன் 'உன்புகழைப் பேச அருள் புரிவாயாக' என்று பாடுகின்றார் எடுத்த எடுப்பில்.

இந்தப் பக்திச்சுவை நிறைந்த திருவிசைப்பாப் பாடலை ஏட்டிலெழுதிச் சிறிது விளக்கங் கூறியிருப்பதைப் படிப்பதனால் மட்டும் அதன் பக்திச்சுவையை முற்றும் அனுபவித்துவிட முடியாது. அதனைப் பொருளுணர்ந்து இசையுடன் ஊன்கலந்து உயிர்கலந்து உள்ளமுருகிப் பலகால் பாடவேண்டும். அப்போதுதான் அதன் முழுச் சுவையினையும் அனுபவிக்க முடியும்.

திருமாளிகைத்தேவர் 'உயர்கொடியாடை' என்று துவங்கும் பதிகத்தில் அம்பலக் கூத்தனது பாதாதிகேச உறுப்புக்களைக் குறிப்பிட்டு அவற்றினிடத்தே தன் உள்ளமும் உணர்வும் ஈடுபட்டதென்று கூறி உள்ளம் உருகிமகிழ்கின்றார்.

அவர் அப்பதிகத்தில் 'அம்பலக்கூத்தா! அமரர்கள் முடிதோய் நின்மலர்ச் சேவடிகள் என்மனத்தருள்; அழகு வளரும் இன்பச் சிலம்பொலிக்கும் உன் அடிக்கீழ் என் உயிர் உளது; நின் திருக்கணைக்கால் நினைந்து என் நெஞ்சம் அதனிடம் நிலைத்துவிட்டது; மலைமகள் வருடிய நின் தொடையினிடத்தே என் அறிவு தங்கிவிட்டது; நினது அரையிற் கட்டியுள்ள புலியதளாடையிற் கோத்துள்ள கயிற்றினிடத்தே என் விருப்பங் குடிகொண்டுவிட்டது; உனது திருவுந்தியில் எனதுள்ளம் மகிழ்ந்து வளைப்புண்டது; உன் உதரத்தணிந்த தனிவடத்தைத் தொடர்ந்து கிடந்ததென் உணர்வு; உளதணிமுறுவல் பவள வாய்ச் செய்ய சோதியுள் தங்கிற்று. என் அறிவு; உன் செங்கமலமலர் முகங்கலந்த தென்கருத்து; உன் சடைவாழ் பிறை மதியும் ஊமத்த மலரும் எங் சிந்தையுள் நிறைந்தது' என்று உளமுருகிப் போற்றியுள்ளார். இவற்றால் சேந்தனார் அம்பலக் கூத்தனைக்கண்டு எவ்வாறு அனுபவித்தார் என்பது விளங்கும். நாமும் அவ்விதம் அனுபவிக்கவேண்டும்.

அப்பர் சுவாமிகள் அம்பலக்கூத்தனைக் கண்குளிரக்கண்டு அனுபவித்து, மனித்தப் பிறவியெடுத்து "அம்பலக்கூத்தனின் குனித்த புருவமும், கோவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும், பனித்த சடையும், பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும், இனித்தமுடைய எடுத்த பொற்பாதமுங்கண்டு களிப்பதற்கே" என்று அறிவுறுத்தியிருப்பது இங்கே சிந்திக்கத்தகும்.

திருமாளிகைத்தேவரின் சிவப்பற்றின் உறுதிப்பாட்டை விளக்க ஓர் எடுத்துக்காட்டினை இங்கே காண்போம்.

"இணங்கிலா ஈசன்" என்று துவங்கும் திருப்பதிகத்தில், 'எண்டிசையும் பரவு சீர்த்தில்லைக் கூத்தன் திருநடங்கண்டு, தீயன ஒழிய வெண்ணீறிடும் சிவனடியார்களை அணுகாத நாய் போற் கடைப்பட்டவர்களையும், பிறர் நகைக்க ஆரியநூல் ஓதிக் கோண்டிருக்கும் அறிவில்லாதவரையும் பேதங்கள் கூறி வாதங்கள் செய்யும் போய்யர்களையும் கண்கள் காணு; அப்பேய் களோடு வாய்பேசா" என்னுங் கருத்தமையத் திருமாளிகைத் தேவர் பாடியுள்ள,

"திசைக்குமிக் குலவு சீர்த்தித் தில்லைக்கூத் துகந்து தீய
நசிக்கவெண் ணீற தாடும் நமர்களை நணுகா நாய்கள்
அரிசிக்கவா ரியங்க ளோதும் ஆதரைப் பேத வாதப்
பிசுக்கரைக் காணு கண்வாய் பேசாதப் பேய்க ளோடே"

என்னும் பாடல் திருமாளிகைத் தேவரது சிவப்பற்று அடியார் பற்றையும், அடியாரை அவமதிப்பாரைக் காணவும், பேசவும் விரும்பாத உறுதியினையும் விளக்கி நிற்கின்றது. இப்பாடலில் 'நள்ளேன் நினதடியாரோடல்லால்; 'எம்பெம்மாற் கற்றி லாதவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே' 'வெண்ணீ றணிகிலாதவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே' என்னுந் திருவாசகக் கருத்துக்களும், 'அறிவிலாப் பிணங்களை நாம் இணங்கில் பிறப்பினினும் இறப்பினினும் பிணங்கிடுவர் விடுநீ' என்னும் சித்தியார் கருத்தும் விரவிவருதல் காண்க.

நாயக நாயகி பாவத்தில் இறைவனை வழிபடும்முறை சன் மார்க்க நெறி எனப்படும். இங்கே இறைவன் நாயகன், ஆன்மா நாயகி எனக் கோள்க.

(தொடரும்)

தருமையாதீனத்தில் :—

குருபூஜை விழா



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
பட்டணப்பிரவேசத்திற்கு எழுந்தருளுதல்

தருமையாதீனத்தில் :—

குருபூஜை விழா

பட்டணப்பிரவேசத் திருநாளில்
ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களும்
பெருமக்களும்.

வரவேற்புரைகள்

காட்டுமன்ஞர்குடி நாட்டுச் சின்னப் பண்ணை

திரு. மு. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் வாசித்தளித்தது

ஔவையார் திருவாக்குப்படி 30ஆம் வயதில் மூன்றும் அற்று ஒரு பொருளையே நாட வல்லமை கொண்டு, பின்பே பட்டம் ஏற்ற பட்டத்தரசே, வருக! வருக!

அருளாட்சி ஏற்றதும், முதற்கண்ணுக முன்னிருந்த குரு மூர்த்திகளின் திருவுள்ளமுணர்ந்து, அவைகளைப் பூர்த்தி செய்வித்த அண்ணலே வருக!

பூலோக கைலாசத்திற்கே எழுந்தருளி கயிலைமலையானைத் தரிசனம் செய்தும், துவாதச ஜோதிர்லிங்க தரிசனம் செய்தும், ஒன்பது நாட்டு அன்பர்களால் கனகாபிஷேகம் செய்விக்கப் பட்ட ஞானபீடத்தரசே வருக! வருக!

ஆட்சி, திருக்கோயில்கள், திருமடங்கள் உள்பட உயர்தர நிர்வாகமும், வடமொழி, தென்மொழியை செழும் பயிராக்கி பெருக்கி அருளிவரும் எங்கள் ஐயனே வருக! வருக!

மாயூரத்தில் மகப்பேறு நிலையம் அமைத்தும், தலைநகரில் திருமடம் நிறுவியும், சைவ சமயத்தை பரவச் செய்தும், சைவ சித்தாந்தக் கல்லூரி அமைத்தும், நாடிவரும் அன்பர்களுக்கு தேவையை வழங்கி வரும் எங்கள் மாணிக்கமே வருக!

அலுவலரை அன்புடன் ஆதரித்து திறம்பட ஆட்சியைக் காட்சியளிக்கச் செய்யும் அருள் அரசே வருக!

21—5—61இல் தருமையாதீனம் 25-ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் காஞட்டுமுள்ளூர் வழிபாட்டிற்கு எழுந்தருளியபோது வாசித்தளித்தவை.

திருப்பணி, கும்பாபிஷேகம், கோடியர்ச்சனை, மகாபிஷேகம், புஷ்பாஞ்சலி ஆகியன செய்து, அன்பர்களைக்கூட்டி அருள்பெற ஆசி அருளி வருவதைக் கடமையாகக் கொண்ட ஆற்றலே வருக !

அன்பர்களுக்குப் பொறுமை, ஆணவம், முதலிய கடும் வியாதிகளை நாடவிடாமலும் ஒழுக்கம், ஒற்றுமை நிம்மதியான வாழ்க்கை முதலியன பெறவும், ஆண்டவனிடம் நன்றி செலுத்தவும் நேர்ந்தவைகளையும், தேவைகளையும் தெரிவித்துப் பலன் பெறவும் திருவுள்ளம் கொண்டு, மூலவர் பெயரால், 51 அன்பர்கள் கொண்ட குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக் கழக குழு உண்டாக்கித் திருக்கோயில்கள்தோறும் வழிபாடு செய்து, சைவர் திருந்த சைவம் ஓங்க, ஆலின் வித்திட்டு விழுதிட்ட ஆலமரம்போல் வளர்ந்து அன்பர்களுக்கு இடம் தர அருளிய தருமை ஞானகுருவே வருக !

தினசரி நியம நிட்டையும், பூசையும், வாராதி விரதமும், மௌன விரதமும், சஷ்டி முதலிய பல கடும் விரதங்களும் அனுஷ்டித்து வரும் வீர வேந்தரே வருக !

ஜாதி, மதம், எளியார், வலியார், பல கொள்கைகள் உடையார், பண்டிதர், பாமரர் என்ற பாகுபாடின்றி அருளாசி வழங்கியும், எவர்களின் மனமும் பக்குவமடையச் செய்தும், எந்தப் பொருள்பற்றியும் பெருங்கூட்டத்தில் கேட்டவரைக் கட்டுதலும், கேளாதவரை விருப்பம் உண்டாக்குதலும் ஆகிய உரையாற்றியும் வரும் தவராஜ சிங்கமே வருக !

பாரதத்தில் உள்ள சோழநாடு, பாண்டிநாடு, ஈழநாடு, மலைநாடு, கொங்குநாடு, துளுவநாடு, வடநாடு, தொண்டைநாடு, நடுநாடு ஆகிய நாட்டவர்களின் அன்பைப் பெற்றிருப்பதை அந்தந்த நாட்டு அன்பர்கள் கூடிக் குவிந்து செய்த கனகாபிஷேக வாயிலாகக் காட்டுவித்த சிவஞானக் கதிரோனே வருக !

தங்களின் வருகையை ஏற்க என்ன புண்ணியம் செய்தோமோ ! பெருமையடைகிறோம், மகிழ்கிறோம், போற்றுகிறோம்.

தருமையாதீன ஐயைந்தாம் பட்டத்து அருளரசின் 16வது ஆண்டின் அருளாட்சி என்றும் பதினாருக விளங்க எல்லாம் வல்ல சோக்கநாதனை இறைஞ்சி வேண்டுகிறோம்.

காணுட்டுமுள்ளூரில் கண்டு கைதோழ வந்தகாலே அடியேன் பிரார்த்தனையை நிறைவு செய்யத் திருவுள்ளம் கோண்டு எங்கள் இல்லத்திற்கும் எழுந்தருளியதால் என்ன மாதவம் செய்தது இவ்வில்லம் என்று மனமகிழ்ந்து பெருந்தகையாகிய தங்கள் போன்னார் திருவடிக் கமலங்களுக்கு எங்கள் பலகோடி வணக்கங்களைத் தெரிவித்துக்கோள்கிறோம்.

காணுட்டுமுள்ளூர் ஸ்ரீ பதஞ்சலீஸ்வரர்கோயில் தர்மகர்த்தா

திரு. சீ. சம்பந்தம் பிள்ளை வாசித்தளித்தது

தேடிக் கண்டு கோண்டேன்
திருஅருட் சிவத்தின் மேய்யுருவை
நாடித் தந்தருள் நல்லகுருவினை
தேடிக் கண்டு கோண்டேன்.

திருக் கயிலைக் குருவினை, தருமைத் தவத்தை
தமிழோடு சைவம் வளர்க்கும் முகிலைக்
கண்ணால் காணுட்டுமுள்ளூர்க் கோயிலில்
தேடிக் கண்டு கோண்டேன்.

காட்டுமன்னார்கோயில்

தருமையாதீன மனைகளில் வாழ் குடிமக்கள் வாசித்தளித்தது

சைவத்தின் கண்ணெனும் தெய்வக் குருமணியே!

அறம் வளர்க்கும் அருள் கோடை வள்ளலாகிய தங்களை எங்கள் கண்ணாரக் கண்டு களிப்பெய்த ஒரு வாய்ப்பளித்த கயிலைப்பெருமான் கழல் தோழுது புனிற்றிளங் கற்றுவின் வரவு கண்ட கன்றெனக் களித்துத் தங்களை வருக! வருக!! எனப் போற்றி வரவேற்றுப் பதமலர்களைப் பல மலர்களாற் பூசித்துப் பணிகின்றோம்.

துயர்தவிர்த்தாளும் உயர்சிவ குருவே!

பலப்பலத் தலைமுறைகளாகத் தங்கள் ஆதீன மண்ணில் பிறந்து தங்கள் அருள்நிழலில் தங்கி வாழ்ந்து, வினை வெம்மைத் துயர்போக்கி, வீட்டின்பம் துய்த்தாற்போன்று மகிழ்ந்து வரும் எங்கள் மாசுபோக்கித் தேசு தரும் குறிப்புடன் தேவரீர் இன்று இங்கு எழுந்தருளிக் கயிலை வாழ் பரமன் அருளொளி வீசும் பொன்னூர் மேனியும், புன்னகை தவழும் பொன்றிகழ் இதழும், கருணைக் கதிர்ஒளி காண்போர்க் களிக்கும் கடைக்கண் நோக்கும், தொல்லை வினைதரு தொல்லையகற்றி எல்லையில் இன்பப் பெருநிலம் அளிக்கும் திருவடியினையும் எங்கள் காட்சிக்கெளிய வாய்க் காட்டியருள எளியேங்கள் காணப்பெற்றமையால் இன்றே யாங்கள் பிறவிப்பயனை எய்தியவர்களாயினோம்! இது வரை யாங்கள் கண்ணியமற்றதென எண்ணிக்கொண்டிருந்த எம் மனிதப்பிறவி தங்கள் அருள்நோக்கின் சிறப்பால் புண்ணிய முடைத்தே! புண்ணியமுடைத்தே!! புவியில் மானிடம் புண்ணியமுடைத்தே!!! என்று மாற்றியெண்ணி மனம் மகிழக் கூடிய அளவுக்கு உயர்ந்துவிட்டதைக் கண்டோம்; வாழிய தங்கள் பேரருள்.

கயிலைப் பரமன் கருணைச் செல்வ!

திரிமூர்த்திகளிலும் மேலாய்த் திகழும் சிவபரம்பொருளே ஆன்மகோடிகள் உய்யக் குருமூர்த்தியாகி எழுந்தருளுமென்பர். ஆதலால், அப்பெருமானேயாகிய தங்களை எம் ஒருநாவால் சொல்லுவதறியோம்; வாழி! தோற்றிய தோற்றம் போற்றி! வல்லைவந் தருளிஎம்மை வழித்தொண்டு கொண்டாய் போற்றி! எல்லையில் இன்பவெள்ளம் எமக்கருள் செய்தாய் போற்றி! தில்லையம்பலத்து ளாடும் சேவடி போற்றி! போற்றி!!

காட்டுமன்னூர்கோயில்

ஞானவிநாயகர் ஆலய நல்லறங் காவலர்

திரு. M. விசுவநாதம் பிள்ளை அன்புடன் அளித்தது

ஆலமர் செல்வன் அருள்நிறை குருவே!

சைவ சமயத்தின் கண்ணெனும் மூவர் தேவாரப் பாடல் பெற்ற மூர்த்தி, தலம், தீர்த்தங்களையே திருவிளங்கச் சிவயோக சித்தியெலாம் விளங்கத் தரிசித்தும் தரிசிப்பித்தும் அருள்

யாலிக்கும் தாங்கள் தங்கள் ஆதீனத் தொடர்பு உடைய எளியேன் அழைப்பையும் ஏற்று, இங்கெழுந்தருளிச் சிறப்பித்து அருளாசி நல்கியமைக்கு என் நன்றிமிக்க பாராட்டுதலைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கற்றவர் விரும்பும் கற்பகக் கனியே !

தாயினும் பரிவு காட்டி, மக்களினத்தின் மனமாசு போக்கி, ஞானப்பாலூட்டி, எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாற் பேறும் இன்பமே தலைமையான தென்பதைச் செல்லுமிடங்களிலெல்லாம் இசைத்துவரும் குருஞான சம்பந்தர் வழிபாட்டுத் திருக்கூட்டத்துடன் தாங்கள் இங்கெழுந்தருளிய அருளிப்பாடு தங்களை எங்கள் உள்ளக்கூடத்தில் அன்புப் பீடத்தில் அமர்த்திப் பூசித்துய்யும் வாய்ப்பை நல்கியிருக்கிறது.

அபிராமி அம்மையின் அருள்நிறை அண்ணலே !

கூற்றுதைத்த சேவடிகோள் நீற்றழகர் அமுதநடேசரின் இடம்பிரியாதமர்ந்தருளி இன்னருள்பாலிக்கும் அபிராமி அம்மையின் கடைக்கண்ணோக்கினுல் தனம், கல்வி முதலாம் பன்னலங்களையும் பேறுதல் எளிதென்பதனைத் தாங்களே வாழ்க்கையில் செய்தும், பிறர்அதன் பெருமை அறிந்து கடைப்பிடிக்கவும், காட்டியருளும் தங்கள் அருளுள்ளம் நீடு வாழி ! தாங்கள் தரிசித்த கயிலைத் தலத்தின் ஓங்கியமைந்த தோற்றம்போல் தங்கள் நல்லறக் கட்டளைகள் நாடோறும் வானளாவும் அன்பை ஈட்டி மக்கள் நல்லொழுக்கத்தில் ஈடுபடுவதைக் கண்ணாரக் கண்டு, தாங்கள் சைவசமயத்திற்குச் செய்துவரும் இடையருத் தோண்டும், தங்கள் அன்புகலந்த அருளாட்சியும் ஒப்புயர்வற்றது என்பதையும் - என்றும் நின்று அழியாது நிலைத்து இருக்கும் என்பதையும் கூறி மகிழ்வுடன் போற்றிப் பணிகின்றேன்.

உடையார்குடி கலைமகள் உதவிபெறும் உயர்துவக்கப்பள்ளி ஆசிரியர்கள் வாசித்தளித்தது

சைவமும் தமிழும் சிறப்புற வளரப் பணியாற்றும்
தவத்திரு குருமணி அவர்களே !

வருக ! தங்கள் அருள்நோக்கு வாய்க்கப்பெற்ற இந்நாள் எங்கள் வாழ்வில் தோன்றிய புனிதநாளாகும். இத்தகைய

தாங்கள் வருதலைக்கண்டு இறைவனே எழுந்தருளிய தன்மை போன்று எங்கள் உள்ளத்திலே உவகை பொங்குகின்றது. அறத்தோடு இயைந்த வாழ்வு வாழும் தாங்கள் சைவ சமய வரலாற்றினை ஏட்டில் குறிப்பிடத்தக்கவராவீர்கள்.

நால்வர் வகுத்த நன்னெறிப் பாதையில் ஈடுபடச் செய்யும்
நல்லாசான் அவர்களே !

வையத்துள் வாழ்வாங்கு வாழ அறவுணர்ச்சி இன்றியமை யாதது அவ்வறவுணர்ச்சி சைவ சமயத்துள் பொன்போல் பொதிந்துள்ளது. சைவ சமயம் வேற்றுநாட்டவரின் உள்ளத் தைத் தோடும் புனிதத்தன்மை வாய்ந்தது. இத்தகைய சமயத் தைக் கண்ணிமைபோல் பாதுகாத்து நற்பணியாற்றும் தங்கள் உள்ளம் மலையினும் மாணப்பெரிது. தமிழகத்தில் தாங்கள் சைவசமயத் தொண்டாற்றுவதை ஒவ்வோர் ஆலயமும் பளிங்கு போல் எடுத்துக்காட்டுகிறது.

சைவ மழை பொழியும் செஞ்சொற் கொண்டலே !

சைவ சமயத்தைத் தமிழகத்து ஆலயங்களில் எல்லாம் பரவச்செய்த பெருமை தங்களைச் சார்ந்ததே ! தாங்கள் ஞான சம்பந்தம், சிவஞானபோதம் போன்ற நூல்களை வெளியிட்டு மக்களை நல்வழிப்படுத்த வழி வகுத்துள்ளீர்கள். இதுபோன்று விழுமிய பணியாற்றும் தாங்கள் காவிரியாற்று மணலினும் சிறக்க வாழ தனக்குவமை இல்லாதான் தாளை இறைஞ்சு கின்றோம்.

காட்டுமன்னார்குடி - உடையார்குடி அனந்தேசர் கோயில்
வாரவழிபாட்டுக் கழகத்தினர் வாசித்து அளித்தது.

கயிலை மலையானைக் கண்டீர் போற்றி
கனக அபிடேகம் கொண்டீர் போற்றி
அயிலார் அம்பிகையை அகத்தீர் போற்றி
அடைந்தார்க் கருளும் அடிகேள் போற்றி
பயில்வார்க் கிரங்கும் பண்பீர் போற்றி
பாரில் பரவி வருவீர் போற்றி
குயிலார் தரும புரத்தீர் போற்றி
குவலயம் சிறக்கவே போற்றி போற்றி.

கைலைகண்ட கண்ணிய மூர்த்தியே !

திருமுனைப்பாடி நாட்டில், திருவாமூரில் திரு அவதாரம் செய் தருளிய திருநாவுக்கரசர், திருவையாற்றிலேயே கண்ட திருக் கயிலாயக் காட்சியை, "அவனருளாலே அவன்றுள் வணங்கி" என்ற திருவாதவூரடிகள் திருவாக்கிற்கிணங்க, திருஆலவா யண்ணலின் திருவருட்டிறத்தால் "மெய்வருத்தம் பாரார்" என்னும் குமரகுருபர சுவாமிகள் வாக்கிற்கு எடுத்துக்காட்டாய் ஏகி, கையிலைக்காட்சியை நேரில் கண்டு களித்து வணங்கிய தங்கள் வருகையால் மனமிக மகிழ்கின்றோம்.

சைவத் தமிழ்க்கடல் தடப்பெருங் கரையே !

வேதநெறி தழைத்தோங்கவும், மிகு சைவத்துறை விளங்க வும் தருமபுரத்தில் வேதாகமப் பாடசாலையும், பல்கலைக் கல்லூரியும், சித்தாந்தப் பள்ளியும், சென்னையில் சமயப் பிரசார நிலையமும் நிறுவி சைவமும் தமிழும் தழைச்சுத் தண்ணருள் பொழியும் தங்களை வருக ! வருக !! என வரவேற்கின்றோம்.

இறை வழிபாடாம் அருள்வழி காட்டியே !

ஆன்மாக்கள் கடைத்தேறும் பொருட்டு, தருமை ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தா வார வழிபாட்டுக் கழகத்தைத் தோற்று வித்து மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய்த் தொடங்கி வழி பட்டு, இம்மையில் சோறும், கூறையும் எய்தவும், அம்மையில் சிவலோகம் ஆளவும் அருள்வழி காட்டும் தாங்கள் குழுவின ருடன் கானாட்டுமுள்ளூரில் கண்டு, கைதொழுது, காட்டுமன்னார் கோயிலுக்கு எழுந்தருளிய பேற்றால், எற்றைக்கும் திருவரு ளுடையோம் என எண்ணி மனம்மிக மகிழ்கின்றோம்.

திருஞானசம்பந்தக் குருமாமணியே !

பாடல்பெற்ற தலங்களின் நடுவண் அமைந்தும், வில்வ வனம் என அழைக்கபபெறுவதுமாய உடையார்குடியில் ஏறக் குறைய ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் பராந்தக சோழனால் நிறுவப்பெற்றதும், அனந்தனால் பூசிக்கப்பெற்றதும் ஆய திரு சௌந்தரநாயகியுடனுறை அனந்தேசர் ஆலய வாரவழிபாட்டுக் கழக 9-வது ஆண்டுநிறைவு விழாவிற்கு தலைவர், அண்ணல்

யானே, திருமுறைவாணர், சொற்பொழிவாளர், ஆகியவர்களையும் வரப் பணித்த தங்கள் திருவருட்டிறத்திற்கு எழுமையும் கடப்பாடு உடையோம். தங்களாட்சி தரணியில் சிறந்து நெடிது நிலவ அருள்பாலிக்க அனந்தேசப் பெருமான் திருவடிகளை வாழ்த்துகின்றோம்.

கயிலைமலையானே போற்றி! போற்றி!!

உடையார்குடி செங்குந்த முதலியார்கள் வாசித்தளித்தது

ஆன்மிக உணர்ச்சியை வளர்க்கும் தவத்திரு குருமணி
அவர்களே !

வருக ! தாங்கள் எழுந்தருளியதை எண்ணும்போழ்து, மதுரையில் சைவசமயப்பெரியார் திருஞானசம்பந்தர் எழுந்தருளிய காட்சி போன்று உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்குகின்றது, தங்கள் அருள்நோக்கு வாய்க்கப்பெற்றமைக்குப் பெரிதும் இறும்பூது எய்துகின்றோம்.

சைவ சமயத்தைப் பரப்பும் சமயப் பெரியார் அவர்களே !

சைவ சமயம் பழம் பெரும் தோன்மை வாய்ந்தது. அறத்தின்பால் பட்டதாகும். அமைதியை அளிக்கவல்லது. இத்தகைய சைவ நெறியை மக்கள் உள்ளத்திலே ஊன்றச்செய்யும் பணிகள் பலப்பல. தமிழகத்து ஆலயங்களில் சைவ நெறியைத் தாங்கள் மேற்கொள்ளச் செய்யும் பணி விழுமியதாகும்.

சைவ நெறியின் காவலர் அவர்களே !

சைவ சமயம் தமிழ் கூறும் நல்லுலகத்தில் தங்களால் வலிவும் பொலிவும் பெற்றதென்றால் மிகையாகாது. சைவ சமய அடியார்கள் போன்று தாங்கள் வாழும் வாழ்வு எங்கள் நெஞ்சைவிட்டு நீங்காது. சைவசமயத்தையும், தமிழையும் கண்போல் காத்து வருகிறீர்கள், இதுபோன்ற நற்செயல்களில் ஈடுபடும் தாங்கள் பஃறுளியாற்று மணலினும் சிறக்க வாழ எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உடையார்குடி

உருத்திரபசுபதீசுவரர்கோயில் நல்லறங் காவலர்

திரு. T. குப்புசாமி ஆச்சாரியார் அன்புடன் வாசித்தளித்தது

சிவமணங் கமழும் சீர்மிகு குருவே !

வருக ! வருக !! தங்கள் மேலான வருகையால் நாங்கள் பெரிதும் மகிழ்கின்ருேம். இராசாங்கத் தமர்ந்த வைதீக சித்தாந்த சைவத்தைப் பொன்மொழிகளாலும், பொதுநலம் கருதிய அருள்மிகு பணிகளாலும், பொருட்கொடைகளாலும் அல்லும் பகலும் வளர்த்து வருகின்ற தங்களை வரவேற்பதினும் எங்கட்கு மிக்க இன்பம் தருவது வேறென்ன உண்டு.

சிவயோகமாகிய தவராச குருவே !

உலகில் இணையற்று விளங்கும் இமயத்தின் மணிமுடிகளனைத்தினும் பெருமைமிக்க கயிலைச் சிகரத்தைத் தரிசித்து, பிறவிப்பயன் இதுவென உணர்த்தியருளிய தங்களைக் கண்ணாரத் தரிசித்துக் கையாரத் தொழுவதற்கு இன்று எங்கட்கு ஏற்பட்ட சிறப்புள்ள வாய்ப்பு நாங்களும் தங்களுடன் கயிலை சென்று வந்ததுபோன்ற இன்பம் தருவதாகவே உள்ளது.

பொன்மலரால் போற்றப்பெறும் புண்ணியரே !

தாங்கள் சைவத்தின் வளர்ச்சிக்குத் தங்களையே ஈடுபடுத்தியுள்ளமையால், ஸ்ரீலஸ்ரீ காசி மடத்து சுவாமிகள் பொன்மலர்களால் தங்கட்குப் பூசனை வழிபாடுசெய்த மேன்மைச் செயலைக் காதாற் கேட்டு மட்டிலா மகிழ்ச்சியடைகின்ருேம். தங்கள் அருள் உள்ளத்தில் தோன்றிய அறங்கள் பலவும் அகில உலகப் புகழ் பரப்புகின்றன. தங்களை என்றும் போற்றுவோம்.

காளுட்டுமுள்ளூர் ஊரினர் சார்பாக

திரு. K. M. ஞானதேசிகம் பிள்ளை பணிவுடன்

வாசித்தளித்தது

திருசிற்றம்பலம்

ஆட்சி யுலகை யுடையாய் போற்றி
அடியார்க் கமுதெலாம் ஈவாய் போற்றி

சூழ்ச்சி சிறிதும் இலாதாய் போற்றி
சூழ்ந்த கடல்நஞ்ச முண்டாய் போற்றி
மாட்சி பெரிதும் உடையாய் போற்றி
மன்னியென் சிந்தை மகிழந்தாய் போற்றி
காட்சி பெரிதும் அரியாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

திருச்சிற்றம்பலம்

பெருமைசால் தருமைக் குருமாமணியே!

தாங்கள் இன்றெமக்கருளி இருள்கடிந்து இங்கெழுந்தருளப் பெற்ற பேறிதனல் எற்றைக்குந் திருவருள் உடையோம்; நன்றியில் நெறியில் அழுந்திய நாடும் மக்களும் அங்கணன் கயிலை காக்கும் அருள்நந்தியின் அருள் நிறைவால் அளவிடற் கரிய நலங்களை அடையும் என்னும் மனத்துணிவுடையோம்.

முன்னமே எழுந்தருளிய முதுபெரும் மலையோ! பன்னகா பரணன் பயில்பெரும் பதியோ! துன்னுபல்வளநிறை துவாத சந்தப் பெருந்தலமோ! இவ்வூர், தாங்கள் இங்கெழுந்தருள என்ன மாதவம் செய்துளோம யாங்கள் என்று எண்ணி வியப் படைகின்றோம்.

"உரையினுர் மதயானை நாவலாரூர - கரையினுர் புனல் தழுவு கோள்ளிடத்தின் கரைமேல்" பதஞ்சலி முனிவரால் வழிபடப்பெற்ற ஸ்ரீ கோல்வளை நாயகியுடனுறை ஸ்ரீ பதஞ்சலீஸ் வரர் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள இக்கானூட்டுமுள்ளூரில் செஞ்சடைமேல் வெண்மதி சூடிய அப்பெருமானைக் கண்டு, கழல் தொழுது, உரிமையால் உரைசெய்த ஒண்தமிழ்களை ஞாலமும் வானும் வாழ அருள்புரியும் ஞானமூர்த்தியாம் தங்களைக் கண்டு கழல்தொழும் பேற்றை எங்கட்களித்தது என்று எண்ணி மகிழ்கின்றோம்.

பரவிய திருநீற்றன்பு பாதுகாத்துய்க்கும் பரமகுருவே!

பூசும் திருநீறுபோல் உள்ளும் புனிதர்களாய்க் கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி, வீடும் வேண்டாவிறலின் விளங்கு பவர்களாய் இங்கெழுந்தருளிய குருஞானசம்பந்தர் வார வழி பாட்டுத் திருக்கூட்டத்தினர்க்கு எங்கள் உளமார்ந்த வரவேற்பை நல்குகின்றோம்.

கயிலைக் காட்சி கண்டருள் குருவே!

தன்னை யார்க்கும் அறிவரியான் என்றும் மன்னி வாழ்வதும், புண்ணியம் திரண்டுள்ளது போல்வதும், புரந்தரன் முதலாங் கடவுளர் போற்றப் பொலிவதும் ஆகிய கைலையைக் கண்டு, அருள்வெள்ளத்தில் திளைத்து, மாதவம் செய்த தென்றிசை வாழ்ந்திடத் திரும்பியருளிய அருமைக் குருமணியே! அடிமலர்க்கெம் சொல்லணியாம் அலங்கல் அணிந்தருளே.

பொய்ம்மை இருள்போக்கும் புனித குருவே!

வடமொழியும் தென்மொழியும் ஆன அம்பலக்கூத்தனின் அருள்பரப்பும் வேதாகம பாடசாலை நிறுவியும், செந்தமிழ்க் கல்லூரி நிறுவியும், சைவசித்தாந்தக் கல்லூரி நிறுவ ஏற்பாடு செய்தும், தோத்திர சாத்திர நூல்களை வெளியிட்டுப் பரப்பியும், திருக்கோயில்களைத் திருவிளங்கப் புதுக்கியும் வரையாது வழங்கிப் புகழென்னும் பொன்மலையுச்சியில் வீற்றிருந்து சைவத் திருவருளொளி பரப்பியும் ஞானசூரியனாக விளங்கும் தருமைக் குருமாமணியாம் தங்கள் பொன்னார் திருவடிகளில் மனமலர்களும் கொண்டு அருச்சித்துப் படிதோயப் பணிகின்றோம்.

குமரகுருபரன் ஆண்டுச் சந்தா 1 — 50

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர்பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம் :- நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.
T. M. குமாரகுருபரன் பிள்ளை B.A., B.L., அவர்கள்,
" குமரகுருபரன் " ஆபீஸ், ஸ்ரீ வைகுண்டம்.

✻ சங்கற்ப நிராகரணம் ✻

பண்டித வித்துவான்

இராம. கோவிந்தசாமிப் பிள்ளை

(மலர் 20, இதழ் 7, பக்கம் 405 இன் தொடர்ச்சி)

பாயிரம் இஃது தற்சிறப்புப்பாயிரம். நூலாசிரியராலேயே செய்யப்பேறுவது. ஏனைப்பாயிரம் சிறப்புப்பாயிரம் எனப் பேறும். நூலாசிரியனல்லோராற் செய்யப்பேறுவது; சேயப்படு போருளும் அவையடக்கமும் பிறவுமுடைத்து ; இஃது அறு வகைச் சமயமும் (அகம்) மாருவீறுடைத்தேன்றுடைத்து என்றும் இறைவனருளிய முப்போருளுணர்த்தும் திப்பியமுடைய எண்ணிலாகமங்களும் (சைவாகமம்) உரைப்பன. முடிவினி லோன்றேயாம் எனற்கு போன் காளிதமிலது. அதன் பரியாய நாமங்களை (கனகம், இரணியம், காஞ்சனம், ஈழம், தனம், நிதி, ஆடகம், தமனியம்) ஒப்புமை கூறி பதி பசு பாசம் விதிமுறை கிளக்கும் ஆய்ந்த நூல்கள் எனச் சாற்றுவது சாலச் சிறந்த தாகும்.

எட்டு நாமங்களைத் திட்டமிட்டியம்பியது (போன்னின் நாமங்களை) எண்குணத்தவனே யீறில் முதல்வன் அவனே யறிந்தருள் சேய்வன் ஆன்மாக்கட் கேனற்குப்போலும் ஏழஞ் சிரு நூறு எடுத்தவாயிரம் வாழும் நற்சகம் மருவாநிற்ப வேன்றமையின் சகம் ஆயிரத்திருநூற்று முப்பத்தைந்தேனல் கூறியவாருயிற்ரும். (சாலிவாகனசகம் ஈண்டுரைப்பதாகும்.) “ பேண்ணை சூழ்ந்த வேண்ணையம்பதிதிகழ் மேய்கண்டவனருள் கைகண்டவர்களில், ஒருவர் ஒருதலை மருவியிருப்ப, வஞ்சப் பிறவிக் கஞ்சிவந்தோருவர், ஏதிறை யருளேன ஈதேனு மாயா, வாதியை யியலினர் மறுதலைத் தருடர, மற்றவயலின ரவருரை மறுத்துச், சோற்றர வயலினர் அவருந் தோலைவுற், றின்னே யேவரும் முன்னே கழியுழி, யாங்கய லிருந்த அருளின ரழகிது, நீங்கள், சங் கற்ப நிராகரித் தமையேன, மற்றவ ருரைத்த சோற்றரு போருள்கோடு, வாதம் சேற்பம், விதண்டையும் ஏதுவும் ஓதுநால் வகை யுவமையுந் திகழ்தர, அருள்சேர்

மாந்தர் வேருள் சேராமற், தருக்கமும் விடயமுங் கற்க, நற்கவி மாந்தர் நகநவிற் றுவனே '' எனக் கூறியிருப்பது நூல்வகை வந்த வகையும் அவை அடக்கமும் கூறியவாருயிற்று.

இனி மறைஞானசம்பந்தநாயனாரருளிய சங்கற்பநிராகரணம் பற்றிய வரலாறு மோருதனிச் சிறப்புடைத்து. குறட்பாவருளிய அறனுடை வள்ளுவர்போன்று பெரும்பொருளைச் சிறுபாவினு ளடக்கி யுரைத்திருப்பது பெரிதும் போற்றற்பாலதாம். மறை ஞானசம்பந்தநாயனர், தமது சங்கற்பநிராகரணத் திருக்குறட் பாவில் ஒன்றிரண்டினைச்சுட்டி உமாபதிசிவத்தின் 2-ம் பாவாகிய அகவற்பாவினைப்பற்றி யாய்வாம்.

பாயிரம்

திருக்கயிலாய பரம்பரை யகச்சந்தானத்துறுங்குரவர் வணக்கம்

1. '' சனற்குமர ஞதி தபோதனர்க்கா ளானேம்
எனற்குவர முன்னியற்றி னேம் ''

காரைக்காலம்மையார்,

2. '' பாட்டினுக்கு வித்தாம் பசுபதியை யாலவனத்
தாட்டுவித்தாள் பாதநினைப் பாம் ''

திருமாளிகைத்தேவர்,

3. '' சிந்தித்து மாளிகைத் தேவனெழு வாயாடி
வந்தித்தேங் காணேமுள் மாசு ''

மெய்கண்டதேவர்,

4. ' ஓதித்தான் மெய்கண்ட தேவன் உரையெமக்குப்
போதித்தார் பாதநினைப் போம் ''

நூல்

குருபக்தி

5. '' தேசிகனை யீசனேனச் சிந்தனைசெய் வார்தினைப்பார்
பாசமறுத் தேபேரின் பம் ''

இங்ஙனம் வரும் பாக்களைநோக்கித் துன்போழித்தின்புறுகவேனப் பாடிய பண்பும் பகரொணுச் சிறப்பிற்ரும். நூற்கண் நுவலப் பேற்ற அகவற்பாக்கள் பத்தாகும். காப்பு - (வணக்கம்) பாயிரம், நூல, இச்சேய்யுட்களந்தாதித்தோடையான் அமையப் பேற்றுள. வடமொழியிலும் தேன்றமிழிலுமுள்ள இலக்கண விலக்கியங்களோடமையாது அவ்வவற்றிலுமுள்ள ஆகம

புராணங்களையும் முற்றக் கற்றவரென்பதும் கூத்தப்பெருமானை யேத்துமரபினரென்பதும், புறச்சந்தானசிரியரு ளொருவரென்பதும் இத்துணைப் பெரியார் யாருமிலரென்பதும் நன்கறிதல் வேண்டும். எல்லாத் துறையிலும் வல்லுனராய இவர் துவாதசச் செய்யுளில் அந்தத்தில்,

"பதிபசு பாச முதிரறி வுகளுடன்
ஆரு முன்னர்க் கூருப் பின்னர்
இருபொரு ணீத்துமற் ஞெருநால் வகையும்
ஈனமின் ஞாதுரு ஞான ஞேயமென்(று)
இசைய மூன்ருய்ப் பசுபதி யென்றவற்(று)
இரண்டாய் இரண்டும் ஒன்றினென் ருகத்
திரண்டாம் பயனெனும் திருவரு டேளியிற்
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தோன்ரு(ம்)
என்றிறை யியற்கை யியம்புத றகுமே
யொன்ரு மென்ற லன்றியு முவப்பும்
இன்ரும் என்ருல் என்பயன் இயம்புக
என்றனை விஞவு மியாவும் விளங்க
வென்றிகோள் கருத்தின் விரும்பினை யாயின்
நதிக்கரை யானேனக் கோதித்தல மந்து
வெண்ணையம் பதிதிகழ் மெய்கண் டவனருள்
உண்ணிலை யுடையோன் ஒருவன் உரைத்த
தவப்பிர காசத் தன்மையில் விரித்த
சிவப்பிர காசச் செழுந்தமிழ் உண்மையை
அருளுடன் ஆய்ந்து கொள்ளத்
திருவருள் வினவல் திருந்திடு மன்றே"

இவ்வடிகளால் சுத்தாத்துவைதமாகிய சித்தாந்தநிலையறிவுறுக் கப்பெற்றதாகும். அக்கரைப் பசுவெனும் பழமொழி யழகுற விளக்கப்பெறுகின்றது. இதனை உலோகோக்தியெனுமணி மென்பர். இருகரைக்கண்ணும் நற்புல்செறிந்த நதிக்கணிடை யொருபசு நின்றது (ஆன்மாவெனினும் பசுவெனினும் ஒன்றேனு நயம் நினைவுறுக்கப்பெறுகின்றது.) அப்பசுவானது இக்கரை யினைவிட அக்கரை தனக்காரத் துய்த்தற்குரித்தோவென வக்கரையுடன் நோக்காநிற்கும். அதுபோலப் பக்குவமுற்ற வான்மா பவக்கடல் கடந்து முத்தியங்களாயுறப் பார்க்கும். அவற்றை ஞான்று கவர்த்தநெறிக்கணின்று மயங்குதலியற்கை. ஆராவியற்கை யவாநீப்பின் அந்நெறியே பேராவியற்கை தரும். ஆகலின் ஆராவியற்கையுறற்கு ஆண்டவனருணிலை வேண்டும். தவவொளியால் சிவவொளி பெறல்கூடும். அவ்வொளி தானும்

திருவருள் ஒளியாலாம். கண்ணுதலும் கண்டக்கரையுங் கரந்தருளி மண்ணிடையின் மாக்கள் மலமகற்றும்-வெண்ணெய் நல்லூர் மெய்கண்டான் வழிவந்தார்க்கன்றி யேனையோர்க் கறிவுறுத்தலாகாமையும், மெய்கண்டார் காணப் புனிதமெனும் அத்துவித மெய்கண்ட நாதன்கழல் மேவினார்க்கன்றியஃது கூடாமையும் வலியுறுத்தப்பெறுகின்றது. முன்னோர் நூலைப் பொன்னே போற்றியவவ்வந்நூற்பொருளையும், வழக்கினையும், அடிகளையும் தானெடுத்து மொழிதலாகச் சாற்றியிருப்பது போற்று மேற்றமுடைத்து.

(1) திருந்தியவருந்தவம் (தொடங்கும் முதல்) ஆதி அந்தம் பெரிதே என்பதன் (2) பெருங்கடல் உதவும் - நவிற்றுவனே. (3) நவிற்றிய - வகுத்துரைத்தனனே. (4) உரைதருபிரமம் - நன்றுமுத்தியென நவின்றனரே (5) முத்தியென்பது - எனவகுத் தனரே. (6) வகுத்துரைபெருக - மறைவல்லோரே. (7) மறைக ளாகமத்து - திரட்சிசேர்ந்திடுமோ (8) சேர்ந்தமும்மை - ஏகமா முயிரியானெனதின்றே. (9) இன்றுனதுரையின் - களைந்திருந் திடுமே. (10) இருந்துன்கேள்வி - சிவகதித்திறனே (11) திறம் பெற நீயிங்கு இது சிவகதியே. (12) இதுகதியாக - திருவருள் வினவல் திருந்திடுமன்றே. எனமுடிவுறுகின்றது. 12-ம் பாட்டி னிறுதியடியே, அந்த முதலாத்தொடுப்பதந்தியாகலின் முதற் பாட்டின் முதலடி திருந்தியவருந்தவம் எனத்தொடங்கியந்தாதித் தொடையாயிற்று.

"ஒருபணி செய்யாச் சிரபுரச் சிறுவரும் (காழிப்பிள்ளையாகியக்
அரசராய தருணத் தலைவரும் [கன்று)
முதிர்பர சமயத் திதமுறு மரசரும்
ஞானம் பெற்ற நன்மையினாலும்"

எனவரும் அடிகள் சத்திநிபாதத்துத்தமராய சாம்சித்தர்களை யுணர்த்தின. இவர்களே சமயகுரவராயினர். இவர்கட்கு என் குணத்தணுகிய இறைவன் அருளுருக்காட்டியாட்கொண்டமை புலப்படுத்திற்று. இந்நூற்கண் அளவைநூல், ஆகமநூல், திருமறை முதலியபல கலைகளையும் நுண்ணிதிற்கண்டு, கண்டினுமினிய தண்டமிழ்மொழியில் விரும்பி பொருளை யழகிதா வுரைத்தும் வாண்டவன் ஆன்மா ஆன்மாவினை மறைத் திருமாளவாதி கட்டுகள் இவற்றினை யெடுத்தியம்பிடு மிலக்கிய நயமும், உவமையாதியணி நலன்களும் கற்றுகேட்டுரைத்தின் புறுமாச்செய்துள்ளனர்.

தாயுமானார்

வித்துவான். மு. இரத்தின தேசிகர்

(மலர் 20, இதழ் 7, பக்கம் 418 இன் தொடர்ச்சி)

உலகாயதத்தில் வெறுப்பு :-

கண்டதே காட்சி. கொண்டதே கோலம். மறுமை என்பது ஒன்றில்லை. இவ்வுலகமும் இதில் நுகரும் இன்பங்களுமே என்றுமுள்ள பொருள்கள் என்று எண்ணித் திரிவோர் உலகாயதர் எனப்படுவர். இவர்களது கொள்கையைத் தாயுமானார் மௌன குரு வணக்கத்தில் '' மின்னனைய மெய்யுடலை '' என்ற பாடலில் வெறுத்துக் கூறுகின்றார். அப்பாடலின் கருத்து '' மின்னலைப் போல் தோன்றி மறைகின்ற இப்பொய்யுடல் நிலையானதென்றும், மைபூசப்பெற்ற கண்களைக்கொண்டு காம இச்சையை உண்டாக்குகின்ற பெண்கள்பால் பெறும் இன்பமே வீட்டின்பம் என்றும், மாடங்கள் அமையப்பெற்ற மேல்வீட்டில் வாழ்வதே சுவர்க்க இன்பம் என்றும், பொன்னே அழியாத பொருள் என்றும் கருதி இவற்றையே போற்றிப் பொய்யானபுறவேடங்கொண்டு நடித்துப் பொறுமை, அறிவு, துறவு, கொடை முதலிய நற்பண்புகளை அவ்வற்றின் போக்கிலே போகவிட்டுத் தமக்கு இணையில்லாத காமம், கோபம், கருடம் பற்றுள்ளம் முதலாய தீய பேய்கள் என்னைப் பிடித்து ஆட்ட இந்த மண்ணுலகத்திலே உலோகாயதனது சமய நெறியில் அடியேன் சேராதவண்ணம் வேதாந்த சித்தாந்த ஒற்றுமை என்கின்ற இப்பேறு அடியேனுக்குப் பொருந்த ஒரு சொல்லைச்சொல்லி அடியேனைத் தடுத்து ஆட்கொண்டபின் சிவானந்தப் பெருவாழ்வில் என்னை வாழச்செய்த ஞானகுருவே - மந்திரகுருவே - யோகதந்திரகுருவே - மூலன் மரபில் வருகின்ற மோனகுருவே '' என்பது.

'' மின்னனைய பொய்யுடலை நிலையென்றும் மையிலகு
 வழிகொண்டு மையல் பூட்டும்
 மின்னார்கள் இன்பமே மெய்யென்றும் வளர்மாட
 மேல்வீடு சொர்க்க மென்றும்

பொன்னையழி யாதுவளர் பொருளென்று போற்றியிப்
போய் வேடம் மிகுதிகாட்டிப்
பொறையறிவு துறவுஈதல் ஆதிநற்குணமெலாம்
போக்கிலே போகவிட்டுத்
தன்னிகரி லோபாதி பாழ்ம்பேய் பிடித்திடத்
தரணிமிசை லோகாயதன்
சமயநடை சாராமல் வேதாந்த சித்தாந்த
சமரச சிவாநுபூதி
மன்னவொரு சொற்கொண்டு எனைத்தடுத் தாண்டபின்
வாழ்வித்த ஞான குருவே
மந்த்ரகுருவே யோக தந்த்ரகுருவேமூலன்
மரபில் வரு மௌனகுருவே ''

என்பது அப்பாடல்.

சித்தாந்த உண்மை :-

வேதாந்தத் தெளிவே சைவசித்தாந்தம் என்பது ஆன்றோர் கண்ட முடிபு.

'' ஓரும் வேதாந்தம் என்று உச்சியில்பழுத்த
ஆராஇன்ப அருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித்தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே ''

என்பது குமர குருபர அடிகளாரின் அமுதவாக்கு. இந்தஉண்மை யினைத் தாயுமான அடிகள் பலபாடல்களில் விளக்கியுள்ளார்கள். இறைவன் ஆட்டுவித்தால் ஆடுவது உயிர்களின் இயல்பு, இதனை உணர்ந்த தாயுமான அடிகள் '' பரிபூர்ண சித்தாந்தம் '' என்ற பகுதியில் 'சாந்தமும் எனதுசெயல் நினதுசெயல்' என்று கூறுகிறார்கள். இதற்குமேல் 'யான்வேறு இறைவன்வேறுஎன்ற நிலையில்லை. இறைவனோடு யான் கலந்தேயிருக்கின்றேன், என்ற உண்மையினை 'யானென்ற தன்மை நினையின்றி இல்லாத தன்மையால் வேறலேன், என்றுகூறிப் புலப்படுத்துகின்றார். இதுதான் வேதாந்தம் சித்தாந்தம் என்ற இரண்டின் சமரசத்தன்மை என்பதை விளக்க 'வேதாந்த சித்தாந்த சமரச சுபாவமிதுவே' என்று கூறியருளுகின்றார்கள் இனி 'எங்கும் நிறைகின்றபொருள்' என்ற பகுதியில் உள்ள ஒருபாடலால் சைவசித்தாந்தத்தின் உண்மை நிலையினை அங் கையின் நெல்லிக்கனியென அறியவைக்கின்றார்கள். அந்தப் பாடலின் கருத்து வேதம், ஆகமம், புராணம், இதிகாசம்,

முதலாக உள்ள எல்லாக் கலைகளும் அத்துவிதமார்க்கம் துவிதமார்க்கம் என்ற இரண்டையும் விரிவாகக் கூறுகின்றன. சொல்லுதற்கு அரிய 'என்றுநீ அன்றுநான்' என்கின்ற துவித அறிவே அத்துவித அறிவைக் கொடுக்கும். சுருதி, யுத்தி, அநுபவம் என்ற மூன்றிற்கும் இது பொருந்தும். துவித வாதிகள் அத்துவித வாதிகள் என்ற இருவரும் இதனை ஒப்புக்கொள்வர். ஆதலால் யான் உய்வதற்குச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு மார்க்கங்களே போதும். சோகம்பாவனையால் எந்த ஒரு பெருமானை நான் கருதுகின்றேனோ அந்த பொருளாக நான் ஆகிவிடுகிறேன். ஆதலால் உன்னை நான்என்று கருதில் (அது நான் ஆனேன்) நீவேறு நான்வேறு அல்ல என்ற அத்து வித வாழ்வை அடைவேன். யான்யாதோரு தெய்வமாக உன்னைக் கருதிடினும், அத்தெய்வமாகி அங்கேவந்து என் தந்தையாகிய நீ எனக்கு அருள்செய்வாய். இம்மையிலும் மறுமையிலும் உயிருக்கு உயிராய் இருப்பதுடன் எங்கும் நிறைந்த பரம்பொரு ளாகவும் நீ இருக்கின்றாய் என்பதாகும்.

"வேதமுடன் ஆகமம் புராணம் இதிகாசம் முதல்
வேறுமுள கலைகள் எல்லாம்
மிக்காக அத்துவித துவித மார்க்கத்தையே
விரிவா வெடுத் துரைக்கும்
ஓதரிய துவிதமே அத்துவித ஞானத்தை
உண்டுபண்ணு ஞான மாகும்
ஊகம் அனுபவம் வசனம் மூன்றுக்கும் ஒவ்வுமிது
உபயவாதிகள் சம்மதம்
ஆதலின் எனக்கினிச் சரியையாதிகள் போதும்
யாதொன்று பாவிக்க நான்
அதுவாதலால் உன்னைநான் என்றுபாவிக்கின்
அத்துவித மார்க்கம் உறலாம்
ஏதுபாவித்திடினும் அதுவாகி வந்தருள்செய்
எந்தைநீ குறையுமுண்டோ
இகபரம் இரண்டினிலும் உயிரினுக்கு உயிராகி
எங்கும் நிறைகின்ற பொருளே.

என்பது அப்பாடல்

இவ்வாறு அரும்பெரும் சமய உண்மைகள் அமைந்துள்ள சைவக் கருவூலமாகிய தாயுமானவரின் பாடல்களை ஓதிஉணர்வது சைவ நன்மக்களின் கடமையும் உரிமையும் ஆகும்.

மருத நாட்டு மங்கை

செஞ்சோற்கோண்டல்

வித்துவான். சொ. சிங்காரவேலன். B. A.

1. மருதப்பர் மனம்

உலகுவப்பக் கிழக்கினிலே ஒளியைப் பாய்ச்சி
ஒளிவெள்ளத் தால்உலகை இன்ப மூட்டிக்
கலகலவென் றேயுலகை மலர வைத்துக்
கைத்தொழிலோர் மெய்த்தொழிலோர் கடமை வாழ்வில்
தலைப்படற்குத் தொடங்கிவைத்து இரவுப் போர்வை
தனிற்கிடந்த பூமகளை யெழுப்பி வானில்
அலர்கதிரோன் புறப்பட்டான் ; விண்ணும் மண்ணும்
ஆர்த்தெழக்கீழ் ஆர்கலியில் உதித்து நின்றான் ! (1)

கூட்டைவிட்டுப் புறப்பட்டு, அன்பு மாறாக்
குஞ்சுகளுக் கிரைதேடப் பறவைச் சாதி
வேட்டையிடத் தொடங்கிநிற்கும் வேட்டுவர் போல்
விரைந்துபறக் கின்றதொரு கவினார் காட்சி ;
மாட்டையடித் தோட்டித்தம் வலிமை வாய்ந்த
மாண்புமிகுந் திண்டோளிற் கலப்பை தூக்கி
வீட்டைவிட்டுப் புறப்பட்டார் மருத மென்னும்
விளைநிலத்து வாழ்வோராம் உழவு வேந்தர் ! (2)

மருதமெனும் அந்நாட்டு வேந்தர் வேந்தர்
மருதப்பர் அரண்மனையின் மேன் மாடத்துக்
கருதிடுமோர் சிந்தனையில் மூழ்கி நின்று
கரங்களைப்பின் கட்டியங்கு உலவி நின்றார் ;
வருகின்ற காலையிளங் காற்றை ஓரார் ;
வையகத்தை மலர்விக்கும் வெயிலை ஓரார் ;
உறுகின்ற பூஞ்சோலைப் புதுப்பூ வீசும்
உவப்புநறு மணம்ஓரார் ; உலவி நின்றார் ! (3)

'மரந்துவிரிந் திடுந்தமிழர் பெரிய நாட்டுப்
படையென்றால் மனமொடுங்கிப் போகும் வையம்!
மரந்துவிரிந் திடுமிந்த நாட்டின் எல்லைப்
பரப்பைமனத் தெண்ணிடிலோ பகைவர் நெஞ்சும்
கரந்துறுமாம் அச்சத்தால்; அவ்வண் ணத்தால்
களித்தோங்கும் தமிழ்நாட்டைக் கொள்ளுதற்குச்
சிறந்துநின்றார் மகதத்தார் என்னின் ஈது
செந்தமிழிந் நிலத்துக்குப் பழுதே யன்றோ? (4)

மூதுகுடுமிப் பெருவழுதி கரிகாற் சோழர்
முடிகொண்டு அடிதழுவி நின்ற நாட்டில்
யோதுவென்ற சொல்மாற்றித் தமிழ் நாட்டார்க்குப்
புகழுரிமைச் சிறப்பென்னும் சொல் விளைத்து
அதிர்கடல் சூழ் பாருலகில் விளங்கி வந்த
அருந்தமிழித் தொன்னாடு மாற்றார் கையில்
கதுமென்றே அகப்படுமோ? கனவு காண்பார்
கையாலா காதமக தத்து வேந்தர்! (5)

என்னுடலிற் குருதியிணைந் தோடுமட்டும்
இன்னுயிரின் ஈற்றேல்லை யிருக்கு மட்டும்
பொன்னுயிரைக் கொடுத்தேனும் இந்நாட்டைப்
போற்றிடுவேன்; ஈதென்றன் முடிவு! என்றால்
எண்ணேத்த வீரத்தால் என்னைச் சூழ்ந்து
இருக்கின்றார் தமிழ்மறவர்; ஆமாம்; அந்த
மின்னேத்த மகதத்தார் புகுவா ரோ? நல்
மேகத்தால் மதியொருநாள் அழிவ துண்டோ?'' (6)

என்றெல்லாம் சிந்தித்தார் மருத நாட்டின்
இணையற்ற பெருவேந்தர்; மேன் மாடத்தின்
ஒன்றுகின்ற படிக்கட்டின் வழியே ஒற்றன்
உலகப்பன் ஓடிவந்தான்; தொழுது நின்றான்;
'நன்றுதீ துணர்திறமை உலகப்பா! உன்
நல்வருகை' எனமன்னர் கேட்கு முன்னே,
'தென்றமிழர் திருவேந்தே! மகத வேந்தன்
தீரவர்மன் படைநமது நாட்டை வீழ்த்த, (7)

அந்நாட்டிற் றிட்டமிட்டார்; ஒரு வாரத்தில்
        அழிந்துவிடு மாம்நமது அழகுநாடு!
தந்நாட்டில் முரசத்தால் அறிவித்தாரால்;
        தகைமாறி மாற்றுருவிற் சென்றிருந்தேன்;
புன்னாட்டார் முழக்கிவைத்த மொழியும் கேட்டுப்
        புண்ணாகிப் போனமனத் தோடே யிங்கு
முன்னாகப் புரவியினில் வந்தேன், வேந்தே!
        முழுதுமிது மெய்' என்றே வணங்கிச் சொன்னான். (8)

சினத்தீதம் நெஞ்சுள்ளே மூள மூளச்
        செய்தியினைக் கேட்டிருந்த மருத மன்னர்
சினத்தீதம் விழிபொசுக்க எழுந்து நின்றார்;
        "சிந்தித்தேன் உலகப்பா! தமிழர் நாடு
சினத்தாலும் குணத்தாலும் சிறந்த நாடு;
        சிந்திக்க மறந்தாரம் மகத மாந்தர்;
உனத்தாலும் நேரமில்லை; ஓடி, இங்கே
        ஒளியப்பர் - அமைச்சர்க்கு ஆளைப் போக்கு!" (9)

புலிமுழக்க மெனச்செவியில் நாட்டையாளும்
        புவியரசர் மொழிவிழவும் ஒற்றன் சென்றான்!
ஒலிமுழக்க மிடுகின்ற நகர்ச் செய்மையில்
        ஒளிர்கின்ற ஆவணநன் மறுகு தன்னை
மலிசினத்துக் கண்களினால் கண்டவாறே
        மாடத்து முன்னிலையில் நின்றார் மன்னர்!
பலியிடற்கு நினைக்கின்றார் பகைவர்! ஆனால்
        பழந்தமிழப் படைமறவர் வலி மறந்தார்! (10)

விந்தியத்திற் கப்பாலே மகத நாடு
        வீரத்திற் சிறந்திடலாம்; உண்மை; பண்பு!
விந்தியத்திற் கிப்பாலோ எல்லை காண
        வியலாத காலத்தால் தமிழர்நாடு
முந்தியதன் வணிகத்தால் நாக ரீக
        முதிர்ச்சியினால் வீரத்தால் கொடைத் திறத்தால்
எந்தமர பினரும்நாம் ஏவல் செய்ய
        இலங்கிவரும் திருநாடாம் எனல் மறந்தார்! (11)

சேய்மையிலே புரவியோன்று வருதல் கண்டார்;
சிந்திக்குமுன் னஃது கடைவீதிக்குள்
சேய்மையிலே கூட்டத்துள் மறைதல் கண்டார்;
சேழித்துயர்ந்த கோற்பிடித்த துகிற்பதாகை
சேய்மையரேன் றுணர்த்திற்றே; யாரா மன்னேன்!
சேந்தமிழிந் நிலத்துக்குப் புதியோன்! ஆயின்
தாய்மை நின்ற விந்நாட்டுள் உளவு பார்க்கத்
தானெழும்பி வந்திடுமோர் அயலானன்றே? (12)

நினைத்து முடித்திடுமுன்னே மேன்மாடத்தி
னின்றிழிந்து விரைந்து பல வாயில் தாண்டிச்
சினையடர்ந்த பூஞ்சோலைப் பக்கம் நின்ற
சேழும்புரவி யோன்றின்மேல் இவர்ந்து அந்தத்
துனைபரியோன் விரைந்தபக்கம் தோடர்ந்து சென்றார்
தூவேந்தர்! புழுதியினைப் படலமாக்கிப்
பினையெழுப்பிக் காலையிலே விரைந்த மாந்தர்
பேருங்குழுவிற் கணைபோல ஓடிற்றுமே. (13)

2. ஒளியப்பர் குடும்பம்

பறந்திடுமப் புரவியின்வேல் இவர்ந்து சென்ற
பாராளும் மன்னவரின் பார்வை யென்னும்
சிறந்திடுநன் னேக்கிற்கும் அப்பால் அந்தச்
சேழும்புரவி மறைந்ததனுல் சோர்ந்தார் மன்னர்!
உறந்தைமுதல் ஒருகுடைக்கீழ் ஆண்டு நிற்கும்
ஒப்பற்ற அரசுக்குப் பகைவர் வந்து
மறந்திறம்பாத் தமிழ்மண்ணிற் கூடல் ஆமோ?
மனத்தாலும் அதுநினைக்கக் கூடும் ஒன்றே! (14)

நேடிதுயர்ந்த மாடம் அது; மாளிகைக்குள்
நித்தியபூ சைமுடித்து 'முருகா' என்று
மடியின்றி உள்ளத்துள் மலர்ந்து போற்றி
மனநிறைந்த அமைதியராய்க் கைப் பிடித்த
கோடியிடையாம் குமுதவல்லி யோடு பேசிக்
கோண்டிருந்தார் ஒளியப்பர்; காவல்வீரன்
துடிப்புடனே வந்தரசர் அழைப்புச் சோல்லித்
தோழுதுநடந்தான்; அமைச்சர் சோல்ல லானுர்; (15)

"குமுதவல்லி! நற்பழமை சூழ்ந்த மேன்மைக்
குடியிருப்பாம் நம்மருத நாட்டி னுக்கு
அமுதமென வாய்த்தவர்நம் அரசர் ஆவார்;
ஆருயிராய் மண்ணுலகைக் காவல் செய்வார்;
கமுகாலும் கரும்பாலும் சாலியாலும்
கவினுடைத்தாம் எனினும்நல் அறத்தினாலே
அமுதமென விளங்கும் நம் தேயமன்றோ?
அதிற்பிறந்து அரசர்குடிப் பணிக ளுக்கே. (16)

வழிவழியாய்த் தொண்டு செய்து வாழ்ந்து நிற்கும்
வனப்புநமக் கேயன்றோ வாய்த்த தந்தச்
செழுமையினை நினைத்திட்டால் மலர்வே என்றும்;
செழுங்கனியே" என்றுரைத்தார்; இசைந்து நின்ற
அழகுமனைத் திருவிளக்கும் மலர்ந்து நோக்கி,
"அன்புருவே! பண்பினுக்கே இசைந்த வாழ்வு
அழகுறநீர் பெற்றீர் உம் அடிகளுக்கு
அடிமைசெயும் பேறதனைப் பெற்றதாலே. (17)

களிக்கின்றேன்" எனவிசைத்தாள்; "அன்பே! எங்கே
கனிமொழியாள்" எனக்கேட்டார் கணவர்; இன்பம்
தெளிக்கின்ற மலர்ச்சோலைப் புறத்தே சென்றாள்;
தேன்மொழியும் என்றெடுத்துக் கூறுமுன்னே
கிளிக்குரலாள் "அப்பா!" என் றுரைத்த வண்ணம்
கெழுதகையால் வந்திடலும், வருங்கோலத்தைப்
பளிக்குருவோ எனவந்த பாவைதன்னைப்
பருகிநின்றார் பாசமே வடிவாம் தந்தை.

[வளரும்]

பன்னெறி விளக்கம்

பெருநாவலர். சே. செல்வப்ப முதலியார்

அல்லற் கஞ்சாரகத் தன்புற்ற சாந்த ரமர்க்களத்து
வெல்லற் கஞ்சார் படைவீறுற்ற வேந்தர் வியன்கவிகள்
சொல்லற் கஞ்சார் கல்விச் சோர்வற்ற மாந்தர் துடுக்கரைப்போற்
கொல்லற் கஞ்சார் சரணென்றோரைக் காட்டிக் கொடுப்பவரே, 85

உடல் வளர்க்கும் மூலிகைகள்

கடலூர், V. பலராமையா B. A., B. L.,

மலர் 20, இதழ் 7, பக்கம் 401 இன் தொடர்ச்சி)

நிலாவாரை 43.

இது ஒன்று ஒன்றரை நீளத்திற் படரும் செடி. இதற்கு நிலவாகை யெனவும் பெயருண்டு. இச்செடி எல்லாப் பிரதேசங்களிலும் கிடைக்கும்.

"நிலாவாரையின் குணந்தான் நீ' கேள் மயிலே !
மல மூல வாயு வெப்பு பாவை இலகிரந்தி
பொல்லாத குன்மம் போருமுமலக்கட்டு முதல்
எல்லா மகற்று மென எண்"

என்பதினால் இம் மூலி கபால உஷ்ணத்தை குறைக்குமென விளங்குகிறது. இதற்கு வெண்மலம் போக்கி, புழுகுடோரி எனவும் மருத்துவர் அழைப்பதுண்டு.

மலம், நீர் இவை இரண்டும் மனிதனுக்கு சரிவர கழிந்தால் அதுவே ஆரோக்கியத்திற்கு வழியாகிறது. மேலிரண்டையும் கழிக்கும் மூலி ஓர் காயசித்தி மூலியாகிறது. அவ்வகை மூலிகளில் நிலாவாரை ஓர் சிறந்த மூலி

உபயோகம் :

இம்மூலியைப் பச்சையாய் பிடுங்கிவந்து இலைகளை மாத்திரம் ஆய்ந்து அவ்விலையை நெய்விட்டு கடாயில் இலை ஒடியும் பக்குவத்திற்கு ஒடித்து, புளி மிளகாய் வைத்து துகையல் செய்து சாப்பிடலாம். புளி சேருவதினால் கற்ப சக்தி குறையினும் அபானவாயுவைக் கண்டிக்கும். மேற்சொன்னபடி வறுத்தஇலையைச் சூரணம்செய்து அச்சூரணம் 2½பலம் கும்மட்டியில் சுட்டெடுத்து மேல்தோல் நீக்கிய சுக்கு சூரணம் பலம் 1. இவைகளை ஒன்றுசேர்த்து கற்கண்டுதூள் அல்லது சீனி 2 பலம் சேர்த்து ஒரு மண்டலம் உண்ண ரத்தமூலம் கட்டாயம் தீரும்.

வேறொரு முறை :

ஷெ இலையை நிழலில் உலர்த்தி உலர்ந்தபின் வாணலிலிட்டு 5 பலம் இலைக்கு 1 பலம் விளக்கெண்ணெ விட்டு வறுத்த இலை ஒடியும்பக்குவத்திலிறக்கி சூரணம் செய்துகொள்ளவும். சூரணம் 2½ பலம், கொட்டைநீக்கிய கொட்டைதிராட்சைபழம் (கொட்டை திராட்சை கடையில் கிடைக்கும்) 2½ பலம், கொட்டை நீக்கியப் பேரீச்சம்பழத்தையும் சேர்த்து உரலிலிட்டு தேன் விட்டு விட்டு மைய லேகிய பதத்தில் இடிக்கவும். தேன் விட்டு இடிக்கா விடில் உலக்கையில் பிடித்துக்கொள்ளும். அப்படி இடித் தெடுத்த லேகியத்தில் நெய்யைக் கையில் கொஞ்சம் கொஞ்சமாய் எடுத்துத் தடவி லேகியத்தைப் பிசைந்து கையில் லேகியம் ஒட்டாத பதத்தில் எடுத்து வைத்துக்கொள்ளவும்.

இந்த லேகியத்தில் நெல்லிக்காயளவு படுக்கைக்குப் போகு முன் மென்று தின்னவும். காலை இரண்டு முறை மலம் கழியும். நீர் தாராளமாகப் போகும். அவரவர்கள் குடலுக்குத் தகுந்த விதம் லேகியத்தை அதிகப்படுத்தியோ, குறைத்தோ சாப்பிட்டுக் கொள்ளலாம். லேகியம் ருசிக்கும். நன்ருயிருக்கும்.

பிரதிதினமும் சாப்பிட்டுவரின் இருகுடலும் சுத்தியாகி சுத்த ரத்தம் பரவி, விஷநீர்கள் அகன்று சரீரம் தேஜஸை அடையும். மலபந்தம் உள்ளவர்களுக்கு இது ஓர் சஞ்சீவி என்றே சொல்லலாம். இதன் சுரசத்தில் கருவங்கம் உருக்கி வார்க்க வெட்டையாகும்.

சூரத்துநிலாவாரை 44.

இது குத்துச் செடிகள். பூ மஞ்சளாயிருக்கும். புஞ்சைக் காடுகளிலும் கிடைக்கும். இதற்கு சுனுமுகி (Senna leaves) என்றும் நாமமுண்டு. இச்செடிகள் திருநெல்வேலி ஜில்லாவில் புஞ்சைக் காடுகளில் பயிர்செய்து விற்பனை செய்யப்பட்டு ஏராளமாய் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதற்கும் மலத்தை அறுக்கும் குணமுண்டு. மேலே சொன்ன நிலாவாரையைப்போல இதையும் லேகியத்தில் பிரயோகம் செய்து உபயோகிக்கலாம்.

ஆனால் இம்மூலியை வறுக்கத் தேவையில்லை. பச்சையாக வதக்கி துவையல் செய்யலாம். நிழலில் உலர்த்திய இலை அல்லது பச்சை இலையைப் பசும்பாலில் 15 நிமிஷம் வேக வைத்து எடுத்து நிழலிலுலர்த்தி சூரணம் செய்து மேற்சொன்ன அளவுபடி லேகியம் செய்து உபயோகிக்க பழைய மலத்தைப் போக்கி சரீரம் தெளிவடையச்செய்யும். நிலவாரை கிடைக்காத பட்சத்தில் இந்த இலையையும் உபயோகிக்கலாம்.

அத்தி (a) 44.

இம்மரத்தை அறியாதார் சிலரே. இதனுடைய பெருமையை நம் முன்னோர்கள் நன்கு அறிவர். இக்காலத்தியவர் இதன் குண விசேஷத்தை அறியாமல் உயிருள்ள சில மரங்களையும் வெட்டி வீழ்த்துகின்றனர். ஒவ்வொரு தோட்டத்திலும், வீடு களிலும் இம்மரத்தை உற்பத்தி செய்தல்வேண்டும்.

இந்தியாவின் உஷ்ண சீதோஷ்ணநிலைக்கு இது ஓர் சிறந்த மூலி. உடலிலுள்ள தணலை ஆற்றக்கூடிய வல்லமை பெற்றுள்ளது. இதன் பழம் மலசுத்தியைச் செய்யவல்லது. இதில் நாட்டு அத்தி, சீமை அத்தி, மலை அத்தி என மூவகைப்படும். இவைகளில் முதல் இரண்டும் மிகவும் உபயோகமானது. மலை அத்தியின் இலையைத் தைத்து அதில் அன்னமுண்ண அநேக வியாதிகள் நீங்கும். திருச்செந்தூர், கன்னியாகுமரி முதலிய இடங்களிலுள்ள பிரதான கோயில்களில் இந்த இலைகளிலே விபூதி மடித்துத் தருவதைப் பார்த்திருக்கலாம் அந்த இலையின் விசேஷத்தை அறிந்தே அவ்விதம் நம் முன்னோர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள் போலும்

சரீரத்திற்கு உஷ்ணம் வேகு அவசியம். உஷ்ணம் குறைந்தால் ஜடம் சாகும். ஆனால் அபானத்தில் உஷ்ணம் அளவுக்கு மிஞ்சினால் பல வியாதிகள் உற்பவிக்கும். அந்த உஷ்ணத்தை எப்பொழுதும் தணித்துக்கொண்டேயிருத்தல் அவசியம். அவ்வகைப்பட்ட உஷ்ணத்தைக் குறைக்கக்கூடியது அத்தி.

உபயோகம் :

அத்திப்பிஞ்சுகளை ஒன்றிரண்டாய் உடைத்துப் பருப்பிட்டு. கூட்டாகச் சமைத்து வாரத்திற்கு இருமுறை சாப்பிடுவது நன்று

அதனுடைய காய்களை நான்கு துண்டுகளாக்கி உப்பிட்டுப்புளித்த மோரில் அத்துண்டுகளை மூன்றுநாட்கள் ஊறவைத்து எடுத்து உலர்த்திப் பத்திரப்படுத்தவும். தேங்காயெண்ணெயில் மற்ற வறுவல்கள் செய்வதுபோல, இதை வறுத்து வறுவல்போல் உபயோகிக்க ருசியாக இருக்கும். பெண்களுக்குப் பிறவிடையாகும் சமயங்களில் சுரோணிதம் அதிகமாகவும் நாட்பட்டுப் போவதற்கும், பெரும்பாடு என்னும் வியாதிக்கும் இம் மூலியின் பிஞ்சுகளைப் புளியில்லாமல் கூட்டுசெய்து அடிக்கடி சாப்பிட்டு வர குணத்தைத்தரும். விந்து கட்டும்.

அத்திப்பால் :

வாய்ப்புண், நாக்குப்புண் இவைகளால், மிகுந்த காரம் வாயிற்படக்கூடாத நிலமையிலுள்ளவர்கள் இதன்பாலை ஒரு காசளவு உட்கொள்ள மூன்று நாட்களில் குணமாகும். அடி மரத்தில் கூர்மையான கற்களால் தட்ட பால்வரும்.

அத்திவேர்பால் (அத்திக்கல்) வேர்பால் எடுக்கும்முறை

பூமியினுள் போகும் இம்மரத்தின் வேரை மாலையில் சுத்தமாக முனையைச் சீவி ஓர் சிறு மண் கலயத்தினுள் சிறுகச் சுண்ணும்பு பூசி ஷெ கலயத்தினுள் முனைசீவிய வேரைப் புகுத்தி இறுக்கிக் கட்டி ஓர் பலகையினுல் குழிவெட்டிய இடத்தை மூடி வைக்க காலையில் அக்கலயத்தில் பால்நீர் ரூபமாய் இறங்கியிருக்கும்; அதைவடித்து காலையில் வெறும் வயிற்றில் 48 நாட்கள் சாப்பிட நீரிழிவு, க்ஷயம், குஷ்டம், ரத்தக்கோதிப்பு, மதுமேகம் முதலிய கடுமையான வியாதிகள் நீங்கும். உடல் குளிர்ந்து தேறும்.

செண்பகப்பூ 45

இப் பூ மனோரஞ்சிதத்தின் அளவு இருக்கும். மரம் பெரியதாய் வளரும். இம்மரம் குளிர்ந்த பிரதேசங்களில், குற்றாலம் பாபநாசம் முதலிய இடங்களில் நன்ருய் பூக்கும். இதில் சிவப்பு, மஞ்சள், வெள்ளை யென மூவகையுண்டு. இவைகளில் எதுவானுலும் சரி கற்பசக்தியுடைத்தாயுள்ளது. இப்பூவைப் பெண்கள் முடியில் அணிந்து கோள்கின்றனர். மிகவும் நறுமண

முடையது. இந்தப்பூவை கீழ்க்கண்ட முறையில் சில மாதங்கள் உண்டுவர சரீரத்திலுள்ள நச்சுநீங்கி நறுமணத்தை கொடுக்க வல்லது. ஒருவருடங்கொள்ள நூறுவயதிருப்பான். இம் மூலிக்கு மலத்தை உடைக்கும் சக்தியுடையதாதலால் அளவுடன் உபயோகித்தல் வேண்டும். அளவுக்கு மிஞ்சினல் வயிற்றுப் போக்கு அதிகமாகும்.

உபயோகம் :

இப்பூவின்மொட்டு குழந்தைகளின் மாந்தத்திற்கு ஓர்சஞ்சீவி; ஒரு பலம் மொட்டுகளை சூரணஞ்செய்து விளக்கெண்ணெயில் மூன்று நாளூறியபிறகு கல்வத்திலிட்டுத் தேன் கொஞ்சம் கொஞ்சமாயிட்டு அரைத்து மெழுகு பதத்தில் பதனம் செய்யவும். ஒரு குன்றிமுதல் ஐந்து குன்றிவரையில் தாய்ப்பால் விட்டுக் கலக்கி மாந்தங்கண்ட குழந்தைகளுக்கு காலைமாலை 20 நாட்கள் கொடுக்க மலபந்தம் நீங்கி ஆரோக்கிய நிலையைப் பெறுவர்.

கற்பமாக உபயோகிக்கும் முறை :

மொட்டு, பூ, சம அளவு நிழலிலுலர்த்திச் சூரணம் செய்து கொள்ளவும். மல்லி (தனியாக) பலம் 5. தோல்நீக்கிய சுக்கு பலம் 1. பரங்கிப்பட்டை பலம் 2. நன்னரி பலம் 2. வறுத்து இடித்து நத்தைசூரிவிதை சூரணம் பலம் 2. செண்பகப் பூ பலம் 2. (எல்லாம் நாட்டுமருந்து கடைகளில் கிடைக்கும்)

செண்பகப் பூ கிடைக்காவிடில் பூக்கடையில் வாங்கி நிழலி லுலர்த்தித் தயார்செய்து கொள்ளவேண்டும்.

மேற்சொன்னவைகளை யெல்லாம் ஒன்று சேர்த்து வைத்துக் கொள்ளவும். இந்தக்கரணத்தில் $\frac{1}{4}$ பலம் அளவுக்கு ஒருகோப்பை நீரிலிட்டு நன்ருகக் கோதிப்பித்து இறக்கி வடித்து பசும்பால் விட்டுச் சீனிசேர்த்து காபி போல சாப்பிட்டுவர ஹிருதயம், ஈரல் குலை, நீர்ப்பை. நரம்பு முதலியன பலப்பட்டு, ரத்தம் பரிசுத்த மாகி சரீரகாந்தியடையும், ஆயுள் நீடிக்கும்.

இலக்கியமும் ஆராய்ச்சியும்

வித்துவான் வி. மு. சுப்பிரமணிய அய்யர் M. A.,

"அறிதோ றறியாமை கண்டற்றால்" (குறள் 1110) என்று திருவள்ளுவரும், "நுணங்கு கேள்வி ஆயப்புகுங்கால் அறிவோக்கும் எவர்க்கும் அன்னன்" (கம்ப. பால. அரசியற். 4) என்று கவிச்சக்ரவர்த்தியாகிய கம்பரும் கூறியுள்ளமை பிற துறைகளுக்கேயன்றி இலக்கியத்துறைக்குப் பொருந்துவதாகும். ஆராய்ச்சிக்கு முடிவு இல்லையாதலின் அறிவும் அத்தகையதே. சிறப்பாகத் தமிழிலக்கியத்தில் தமிழ்நாட்டில் நூல்கள் எழுதப் பட்டு வந்த பனையோலைகள் இராமபாணம் முதலிய பூச்சி களால் துளைக்கப்பட்ட காரணத்தால் பல கேடுகளுக்கும், பிறழ்ச்சிகளுக்கும் உள்ளாயின. சிலர் அறிவின் குறையாலும் பிழைபட்ட உரைகளும் பதப்பிரிவுகளும் பிறவும் உண்டாயின. ணகர ளகர மயக்கங்களும், தகர ககர மயக்கங்களும், லகர வகர மயக்கங்களும் உண்டாகிப் பல பொருள் மயக்கங்களைத் தந்தன.

சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகத்தின் 256 ஆம் செய்யுளின் உரையில் 'யானைநாதத்திற் றோன்றுதலின் அதற்கு வணங்குதலியல்பு' என்று ஒரு செய்தி காணப்படு கின்றது. அதைப் பதிப்பித்த டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் கூறிய செய்தி ஒன்று ககர தகர மயக்கத்தை நன்கு விளக்கும். எல்லாச் சுவடிகளிலும் 'நாகத்தில்' என்றே க்காணப்பட்டது. நாகம் என்பதற்கு மலை என்று பொருள் கொண்டு கிரிசரம் என்ற மூவகை யானைகளில் ஒன்றாகப்பொருள் கொள்ளலாமாயினும், பின்னே வரும் இசைக்கு வணங்குதல் இயல்பு என்பதோடு பொருந்துமாறு இல்லை. பின்பு ஒரு பழைய ஏட்டுச்சுவடியைப் பார்த்தபோது 'நாதத்தில்' என்று காணப் பட்டது. ஐயரவர்களுக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. இச்செய்தி அவர்களே கூறியது. நாமகளிலம்பகம் 34 ஆம் செய்யுளில் 'கருங்கடல் வளந்தரக்கரையும் பண்டியும்'

என்று மூலபாடமும் அதற்கு ஏற்ப உரையும் காணப்படுகின்றன. 'நகர்க்கரையும் பாடமாயின், கரைதல் திசைச்சொல்லாய்க் கொண்டு போம் என்னும் பொருள் பயக்கும்' என்று பிறிதோர் உரையும் காணப்படுகின்றது. இப்பாடபேதம் ஒற்றுக்களுக்குப் புள்ளியில்லாமலிருந்ததாலும் ககர தகர மயக்கத்தாலும் நிகழ்ந்ததே என்று ஏட்டுச்சுவடிகளைப் படித்துப் பழகிய அறிஞர்களுக்கு எளிதில் விளங்கும்.

னகர ளகர பேதமும் இன்றும் அச்செழுத்து வந்த பின்பும் பெரிதும் மயக்கம் தருவது. சங்க நூல்களில் தலைமகன், தலைமகள் என்று வரும் இடங்களில் விழிப்புடனிருந்து பார்த்தாலன்றி விபரீதமான பிழைநேரும். உன், உள் என்ற சொற்களும் இந்த முறையில் உண்டாகியிருக்கலாம்.

நம் முன்னோர், முன்னோர் மொழிபொருளைப் பொன்னேபோற் போற்றினர். அதற்கு எடுத்துக்காட்டாக இரண்டு ஒன்று கூறுவோம். பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணத்தில், திருமணப்படலத்தின் 30 ஆம் செய்யுளின் 1-2 அடிகள் வென்றிக் கணத்தை விடுத்தான் கனல்மீது பெய்த குன்றிக் கணம்போற் சுழல் கண்ணழல் கொப்பு பனிப்ப என்று காணப்படுகின்றன. இது பாடமாயின் கனலில் பெய்த குன்றிக்கணம் கருகிச் சாம்பராதலேயன்றிச் சுழலும் அழல் கொப்பளித்தலும் இல்லை. இவ்விதம் பிழை உண்டாகிய காரணம் ஏட்டுச்சுவடியைப் படிக்கத்தெரியாமையே. இச்செய்யுள் காப்பியக் கலித்துறை, நேரசையாயின் ஓரடிக்கு 15 எழுத்தும் நிரையாயின் 17 எழுத்தும் அமையும். முதலடியில் விடுத்தான் என்று ஒற்றீற்று முற்றுகப்படித்துவிட்டமையாலும் கன என்பது பொருள் தராமல் வறிதே நின்றமையாலும் னகர ஒற்று ஒன்றைச் சேர்த்து 'கனல் மீது' என்று பாடம் வழங்கப் பட்டது. இது ஒரு பழஞ் செய்யுளின் கருத்து. புறநானூறு 300 ஆம் பாட்டில் நெருநல் எல்லைநீ எறிந்தோன் தம்பி, அகல்பெய் குன்றியிற் சுழலுங் கண்ணன் என்று காணப்படும் அரிய உவமை ஈண்டு எடுத்தாளப்பட்டது. 'விடுத்தான் அகன்மீது' என்று படித்தால் பொருள் அமைதி சிறக்கும்; புறநானூற்றில் இச்செய்யுளின் அடிக்குறிப்பில், ஒப்புமைப் பகுதியாகத் திருவிளையாடற் புராணச் செய்யுளடிகள் தரப் பட்டுள்ளன.

திருப்புகழில் ‘ ஆசைகூர் பத்தனேறும் ’ என்ற செய்யுளில் ‘ மாக்குதா புஷ்பமாலே ’ என்றே பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதன் திருத்தமானபாடம் ‘ மாத்ருகா புஷ்பமாலே ’ என்பது என்று சைவசித்தாந்த சமாஜப் பதிப்பின் முகவுரையில் தக்க விவரங்களோடு கூறப்பட்டுள்ளது. இவைகளேல்லாம் ஏடுகளில் ககர தகர மயக்கத்தால் நேர்ந்தனவே.

இன்றும் ஏடுகளில் ல, வ, ய, ப, ட என்பவை பெரிதும் மயக்கத்துக்கு இடமாவன. திருவிளேயாடலில் உக்கிரகுமார பாண்டியன் திருவவதாரப்படலத்தில் பல அரசர் வந்து அவர் அவதரித்ததைப் பாராட்டியதாகக் கூறும்பகுதியில் தருமமா தவத்தின் பேரூ (21) என்னும் செய்யுளில் ஈற்றடி ‘ கனிதரு கருணே போலிச் காதலன் ரூேற்ற மேன்பார் ’ என்று அச்சுப் பிரதிகளில்காணப்படுகின்றது. அச்செய்யுளில்பலபடப்புணேவணி அமைந்துள்ளது. அதன் போருளமைதியை ஊன்றிநோக்கின் மற்ற அடிகளில் உள்ளதைப்போல இவ்வடியிலும் ‘ கனிதரு கருணேயோவிக் காதலன் ’ என்றிருக்கவேண்டும். சீவகசிந்தாமணியில் காந்தருவதத்தையாரிலம்பகத்தில். ‘ கோன்ஞேழுகு வேலியவதத்தன் ’ (2) என்று காணப்படுகின்றது இப்பகுதிக்கு நேரான ஸ்ரீ புராணப்பகுதியில் வ்ருஷபதத்த ஸ்ரேஷ்டிக்கும் பத்மாவதிக்கும் புத்திரன் ஜினதத்தன் என்பான் என்பது உள்ளது. இதனே நோக்கும்போழுது வேலிடபவதத்தன் என்பது பிழையற்ற பாடமாதல் விளங்கும்.

யாப்பருங்கலம் எழுத்தோத்தில் ஆய்தமும் யவ்வு மவ்வோடு வரினே, ஐயே னேழுத்தோடு மெய்பெறத் தோன்றும் என்ற அவிநயச் சூத்திரம் காணப்படுகின்றது. இதை ஒட்டியே இலக்கிய வழக்காறும் உள்ளது. திருக்குறளில் ‘ செய்க போருளேச் செறுநர் செருக்கறுக்கும், எஃகதனிற் கூரியதில் ’ (759) ஆய்தத்துக்கு யகரம் எதுகையில் வந்துள்ளது. சிந்தாமணியிலும், ‘‘ அஃதே யடிகளு முளரோ வேன்ருற்கருளுமா றிஃதா விருந்தவாறென்ருர்க் கேன்ஊேப்பேறவல்லார் எய்தா இடருளவோ எங்கேங்கேன்ற திசைநோக்கி வேய்தா வடி தோழுது வேந்தன் கோயிற் கேழுந்தானே ’’ (1884) சூளாமணியில் ‘‘ அஃதே யஃதேயாங்கார வேகனுங்கோ ரயில் வாளால், வேய்தாங்குற்று வீடினுனன்றே நன்றே மறுமாற்ற

மைதோய் மலையும் மண்ணகமு நமதாச் செய்வன் செய்யே னேற், செய்தாரமரருலகாள் வானிரண்டிலொன்று திண்ணமதே'' (அரசியற் சருக்கம் 206) என்று இதேவகை எதுகை காணப்படு கின்றது. இதனைப்போலவே திருவாசகம் திருச்சதகத்திலும் "எய்தலாவதென்று நின்னை'' என்று தொடங்கும் செய்யுளிலும் ஈற்றடி "இஃதலாது நின்கணொன்றும் வண்ணமில்லை ஈசனே'' என்றே யிருக்கவேண்டுமெனத தோன்றுகின்றது. இந்த ஊகத் திற்கு இலக்கிய மரபு துணைபுரிகின்றது. நன்னூல் மயிலைநாத ருரையில் "அம்முனிகரம்'' என்ற சூத்திரத்தின் அடிக்குறிப் பில் 'அம்முனிகர மாய்தமென்றிவை எய்தின்' என மூலமும், அகரமுன் இகரமும் ஆய்தமும்வரின் என உரையும், 'அிஇவனம் ஐவனம்; கஃசு கைசு' என உதாரணமும் மிதிலைப்பட்டி ஸ்ரீ அழகியசிற்றம்பலக்கவிராயரவர்கள் வீட்டுப் பிரதியிலும் வேறு மூன்று பழைய பிரதிகளிலும் காணப்பட்டன என்ற அடிக் குறிப்பும் ஆழ்ந்து சிந்தித்தற்குரியது. இவற்றையெல்லாம் கருவியாகக்கொண்டு நோக்கின் திருவாய்மொழி 2 ஆம்பத்து 9 ஆம் திருமொழி 2 ஆம் செய்யுளில் முதலடி 'ஈதே யான் உன்னைக் கொள்வது எஞ்ஞான்றும் என்' என்று உள்ளது. ஏனைய அடிகள் "மைதோய் சோதி மணிவண்ண எந்தாய், எய்தா நின்கழல் யான் எய்த ஞானக்கைதா காலக்கழிவு செய்யே லே'' என்று உள்ளன. மேலே கூறியுள்ள இலக்கியச் சான்றுகளை நோக்கும்போது முதலடி "இஃதே'' என்று இருத்தல்வேண்டும். ஒவ்வொரு திருமொழியும் அந்தாதித் தொடையாகஅமைந்திருத்தலால்இப்பாசுரத்தின் முன்பாசுரத்தின் ஈற்றிலும் "இஃதே'' என்றே இருக்கவேண்டுமெனத் தோற்று கின்றது.

பொருளை வரையறை செய்யாமையாலும் ஆன்றோர் மரபை நன்கு உணராமையாலும், பதங்களைப் பொருளுணர்ந்து பிரித்துப் பதிப்பிக்காமையாலும் நேரும் பிழைகள் பல. முற் காலத்தில் "படித்தவன் பாட்டைக் கெடுத்தான், எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்'' என்று ஒரு பழமொழி உண்டு. அச்சு யந்திரம் வந்தபின்பு அதனோடு 'அச்சிட்டவன் அவ்வளவையும் கெடுத்தான்' என்பதையும் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

(தொடரும்)

* நடுநாட்டிற் சில தலங்கள்

வித்துவான்

ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

திருமுதுகுன்றம்

இருப்பிடம் :

சைவ சமயாசாரியார்களால் பாடல்பெற்ற 274 சிவத்தலங்களுள் நடுநாட்டில் அமைந்து விளங்குவன 22. அவற்றுள் ஒன்பதாவது தலமாக விளங்குவது விருத்தாசலம் என வழங்கும் இத் திருமுதுகுன்றம்; பிரமன் மலைகளைப் படைப்பதற்கு முன்னரே சிவபெருமானால் முதன்முதல் படைக்கப்பட்டதாகலின் இம்மலை முதுகுன்றம் என்றும், (குன்று—மலை) பழமலை எனவும் வழங்கப்பெறுகிறது. வழக்கத்தில் விருத்தாசலம் என்றே வழங்கி வருகிறது. விருத்தம் - முதுமை, அசலம் - மலை, இது வடமொழிப் பெயர். முத்தி தரும் தலங்களுள் ஒன்ருகக் கருதப் படுவதால் விருத்த காசி எனவும் வழங்கப்படும். காசியைவிட வீசம் அதிகச் சிறப்புடையது என்றும் கூறுவர். இத்தலம் தென்னார்க்காடு மாவட்டத்தில் ஒரு தாலுக்காவாக விளங்குகிறது. விழுப்புரம் - திருச்சி இருப்புப்பாதையில் இது ஒரு சந்திப்பு நிலையமாகத் திகழ்கிறது. சென்னை - திருச்சி நெடுஞ் சாலையில் 122-ஆவது மைலில் உள்ள உளுந்தூர்ப்பேட்டையிலிருந்து தென் கிழக்காகச் செல்லும் கற்சாலையில் 16-மைல் சென்ருல் இத்தலத்தை அடையலாம்.

தலச்சிறப்பு :

இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் 7 பதிகமும் திருநாவுக்கரசர் ஒரு திருத்தாண்டகப் பதிகமும், சுந்தரர் மூன்று பதிகமும்

---

* 8—7—61, 9—7—61 ஆகிய இருநாட்களில் இத்தலங்களை சென்னை தருமையாதீன மடாலய தேவாலய சமயபிரசார நிலையத்தினர் அன்பர்களுடன் அடைந்து வழிபட்டனர்.

ஆக 11 பதிகம் பாடியுள்ளனர். சுந்தரர் இத்தலத்திறைவனை வேண்டிப் பன்னீராயிரம் பொன் பெற்று அவற்றை மணிமுத்தா நதியில் இட்டுத் திருவாரூர்க் கமலாலயத்தில் "பொன் செய்த மேனி" என்ற பதிகம் பாடி எடுத்தார். விபசித்து முனிவர் வன்னி மரத்தழையைக் கூலியாகக் கொடுத்தே ஆதியில் இக் கோயிலைக் கட்டினர் என்றும், அத்தழை வேலைக்குத் தக்க பணமாக ஆகியது என்றும் கூறுவர் மாசிமக ஆறுந்திருவிழாவில் விபசித்து முனிவருக்குக் காட்சி வழங்கும் ஐதிகம் இன்றும் நடைபெறுகிறது. அகத்தியர், நாதசர்மா அநவர்த்தினி, சுக்ராச்சாரியர் யாக்ஞவல்கியர், குமாரதேவர் குரு நமச்சிவாயர் முதலியோர் இத்தலத்திறைவனைப் பூசித்துப் பேறுபெற்றனர். திருமாலாதிய தேவர்களின் தவச் சிறப்பால் தோன்றிய நதியினைப் பழமலை நாதர் தமது திருக்கரத்தால் தடவி மணிமுத்தா நதியாகத் திகழச் செய்தார்; இந்நதியே இங்குச் சிறந்த தீர்த்தமாகத் திகழ்கிறது. இது கோயிலின் வடக்குப் பக்கத்திலும், கிழக்குப் பக்கத்திலுமாகச் செல்கின்றது கோயிலின் வடக்குப் பக்கமாகச் செல்லுமிடத்தில்தான் புண்ணிய மடு என்ற தீர்த்தம் உள்ளது. இறந்தவர்களின் எலும்பை இத் தீர்த்தத்தில் இட்டால் சில மாதங்களில் அது கல்லாக மாறுவதை இன்றும் காணலாம். இவ்வூரில் ஐம்பதாயிரம் மக்கள் வாழ்கின்றனர்.

கோயில் அமைப்பு:

கோயில் மிகப் பெரியது. கிழக்கு மேற்கில் 660 அடியும், தெற்கு வடக்கில் 392 அடியும் கொண்ட நிலப்பரப்பில் கோயில் அமைந்துள்ளது. கோயிலைச் சுற்றியுள்ள வீதிகள் நான்கும் கோட்டை வீதி என வழங்கப்படுகின்றன. முஸ்லிம் ஆட்சிக் காலத்தில் கோட்டைகள் இருந்தன என்று தெரிகிறது. எழு நிலைக் கோபுரங்கள் ஐந்து இக்கோயிலுக்கு எழிலைத் தருகின்றன. கைலாசப் பிராகாரம், வன்னியடிப் பிராகாரம், அறுபத்து மூவர் பிராகாரம் என மூன்று பிராகாரங்களைக்கொண்டு திகழ்கின்றது. கோயில் சோழர்களால் திருப்பணி செய்யப்பட்டிருக்கிறது. நான்கு கோபுரங்கள் நாயக்க மன்னர்களால் திருப்பணி செய்யப் பட்டுள்ளன. சுவாமி விருத்தகிரீசுவரர் என்றும், பழமலைநாதர் என்றும் வழங்கப்படுகிறார். அம்மை விருத்தாம்பிகை என்றும் பெரியநாயகி என்றும், வழங்கப்படுகிறார். இரு சந்நிதிகளும் கிழக்கு நோக்கித் தனித்தனி ஆலயங்களாகத் திகழ்கின்றன

குருநமச்சிவாயர் அம்மையைக் கிழத்தி என்று பாடிச் சோறு கேட்க, அம்மை கிழவி எப்படி சோறு எடுத்துவர இயலும் என்று கூற, உடனே குருநமச்சிவாயர் இளமையுடையாளே என்று பாட, அம்மை உடனே சோறும் நீரும் அவருக்குக் கொடுத்தாள். அதுமுதல் அம்மை பாலாம்பிகை என்ற பெயருடன் சுவாமி கோயிலின் வடமேற்குத் திசையில் கோயில் கொண்டுள்ளார். குமாரதேவருக்கு அம்மை முதிய வடிவத்தில் வந்து பொன் வள்ளத்தில் பால் கொடுத்துப் பசி நீக்கி இத்தலத்திலேயே இருக்க எனப் பணித்தார். அவரது திருமடம் தென் கீழ்த் திசையில் இன்றும் சிறந்து விளங்குகிறது. விநாயகர் கோயிலின் நிலமட்டத்தின் கீழ் 18 அடி ஆழத்தில் ஆழத்துப் பிள்ளையார் என்ற பெயருடன் காட்சி தருகிறார். முருகப்பெருமான் இத்தலத்தின் மேற்கு எல்லையில் குளஞ்சியப்பராகவும், கிழக்கு எல்லையில் கரும்பாயிரம் கொண்ட அப்பராகவும், வடக்கு எல்லையில் வெண்மலையப்பராகவும், தெற்கு எல்லையில் வேடப்பராகவும் காட்சி வழங்குகிறார். தீர்த்தம்—அக்கினி தீர்த்தம், சக்கரத்தீர்த்தம், குபேர தீர்த்தம் என்பன. இவை கோயிலுக்குள்ளேயே உள்ளன. தலவிருக்ஷம்—வன்னி; இது இரண்டாம் பிராகாரத்தில் தென்கிழக்கு மூலையில் உள்ளது. இக்கோயிலில் 72 கல்வெட்டுக்கள் உள்ளன.

திருநெல்வாயில் அரத்துறை

ஆதிசேடனாகிய அரவம் (பாம்பு) பூசித்துப் பேறுபெற்றமையால் அதன் பெயரால் அரவத்துறை எனப்பெற்ற இத்தலம் வகரம் கெட்டு அரத்துறை என்று மருவி வழங்குகிறது. வெள்ளாறு என வழங்கும் நிவா நதியின் கரையில் உள்ள 1. ஆதிதுறை 2. ஆலந்துறை 3. மாந்துறை, 4. ஆடுதுறை, 5. வசிட்டதுறை 6. அரத்துறை, 7. கரந்துறை என்ற ஏழு துறைகளுள் சிறந்து விளங்குவது இவ்வரத்துறை; இவ்வேழு துறைகளும் இந்திரன், மாண்டவியர், இராகு, மிருகண்டு, சனி, வசிட்டர், வால்மீகி, அகத்தியர் ஆகியவர்களால் பூசிக்கப்பெற்ற சிறப்புடையன. மூவராலும் பாடல்பெற்றது. ஊரும் சிறியது. கோயிலும் சிறியதே. கோயிலின் தென் பக்கம் வெள்ளாறு எனப்பெறும் நிவா நதி செல்கின்றது. அம்மை நீவா என்று அழைத்தமையால் நிவா நதி எனப் பெயர் பெற்றது. இந்நதி இத்தலத்தின் சிறந்த தீர்த்தமாகும். கோயிலின் தென்கீழ்த்

திசையில் தலவிருக்ஷமாகிய ஆலமரம் சிறந்து விளங்குகிறது. பழைய தல விருக்ஷத்தின் விழுதின் வழி வந்த மூன்ருவது மரம் என்பர் இதனை. முன்னைய இரண்டும் இருந்த இடத்தை வெள்ளாறு கவர்ந்து கொண்டது என்பர். நீலமலர்ப் பொய்கை, அன்னமலர்ப் பொய்கை என்ற தீர்த்தங்கள் இப்பொழுது வயல் களாக உள்ளன. சுவாமி, அரத்துறை நாதர். இவர் கிழக்கு நோக்கியுள்ளார். அம்மை ஆனந்தநாயகி, இவர் தெற்கு நோக்கியுள்ளார்.

முத்துச்சிவிகை :

இத்தலத்திறைவர் திருஞானசம்பந்தருக்கு முத்துச்சிவிகை யும், முத்துக்குடையும், முத்துச் சின்னமும் வழங்கியருளினர். திருஞானசம்பந்தர் ''எந்தை ஈசன்'' என்ற திருப்பதிகம் பாடித் துதித்துள்ளார். திருஞானசம்பந்தர் இங்கு வருவதற்கு முதல் நாள் இரவு தங்கியிருந்த இடம் மாறன்பாடியாகும். அது இப்பொழுது இறையூர் என்று வழங்குகிறது. இங்குள்ள இறைவன் பெயர் தாகந்தீர்த்த ஈசர். அம்மை - அன்னபூரணி; நடுநாட்டுத்தலம் 22-ல் இது முதல் தலமாகும். இது பெண் ணுகடத்திற்கு மேற்கே 4 மைல் தொலைவில் உள்ளது.

பெண்ணுகடம் :

பெண் - தேவகன்னியர், ஆ - காமதேனு கடம் - வெள்ளை யானை ஆகியோர் பூசித்தமையால் பெண்ணுகடம் எனப் பெயர் பெற்றது இத்தலம். விருத்தாசலத்திலிருந்து திட்டக்குடி செல்லும் சாலையில் 11-வது மைலில் உள்ளது. நடுநாட்டுத் தலங்கள் 22-ல் இரண்டாவதாகத் திகழ்வது. ஊரும் கோயிலும் நடுத்தரமானவை. கோயில் மூன்று பிராகாரங்களையுடையது. ஒவ்வொரு பிராகாரமும் ஒவ்வொரு கோணமாகக் காணப்படு கிறது. சுவாமி - சுடர்க்கொழுந்தீசர், அம்மை - கடந்தைநாயகி, இரு சந்நிதிகளும் கிழக்கு நோக்கியவை. சுவாமி விமானம் தூங்கானை மாடமாகத் துலங்குகிறது. தூங்கானை மாடம் - கஜப்ரஷ்டவிமானம், அதாவது யானையின் பின்புறம் போன்றிருப் பது. சுவாமி விமானத்தின்பின் சிறிது வடபுறம் கட்டு மலை மீது சௌந்தரேசர் சிவலிங்க வடிவில் காட்சி வழங்குகிருர்.

இதன் வடக்கே அம்மன் கோயில் தனிக் கோயிலாகத் திகழ்கின்றது. சுவாமி சந்நிதியில் உள்ள நந்தி சுவாமியை நோக்காது கிழக்கு நோக்கியுள்ளது. பிரளயங்காப்பதற்காகத் திரும்பியவர் அப்படியே இருப்பதாக ஐதீகம். இந்நந்திக்குப் பிரளயங்காத்த நந்தி என்று பெயர்.

பெரியோர் அவதாரம் :

அறுபத்துமூன்று நாயன்மார்களுள் கலிக்கம்ப நாயனார் அவதரித்த சிறப்புடைய தலம். சந்தான குரவர்களுள் முதல்வராகிய ஸ்ரீ மெய்கண்டார் அவதரித்த சிறப்பும் இத்தலத்திற்கு உண்டு. ''கடந்தை நகர் மறைஞானசம்பந்தர்'' என வருவதால் சந்தான குரவர்களுள் மூன்றாவது ஆசாரியராகிய மறைஞான சம்பந்தரும் இங்கு அவதரித்ததாகவோ அல்லது வாழ்ந்ததாகவோ கருத இடமுண்டு. ஸ்ரீ மெய்கண்டாரின் தந்தை அச்சுதகளப்பாளர் வாழ்ந்த இடம் அச்சுதகளப்பாளர் மேடு என இன்றும் வழங்குகிறது. அவ்வச்சுதகளப்பாளர் மேட்டில் மெய்கண்டார் திருக்கோயில் கொண்டெழுந்தருளியுள்ளார். மறைஞானசம்பந்தர் மடம் வடக்கு வீதியில் உள்ளது. அப்பர் சுவாமிகள் ''பொன்னார் திருவடிக்கு'' என்ற திருவிருத்தப் பதிகம் பாடிச் சூலக்குறியும், இடபக்குறியும் தம்மீது பொறிக்கப் பெற்றார். கடந்தைப் புராணம் என்ற பெயரில் இதற்கு ஒரு தலபுராணமும் இருக்கின்றது. கல்வெட்டுக்களும் பல இருக்கின்றன. திருஞானசம்பந்தர் ''ஒடுங்கும் பிணி'' என்ற திருப்பதிகம் பாடித் துதித்துள்ளார்.

திருஎருக்கத்தம்புலியூர் :

இது நடு நாட்டுத்தலம் 22-ல் நாலாவதாகத் திகழ்வது. வெள்ளெருக்க மரம் தலவிருக்ஷமாதலின், இத்தலம் இப்பெயர் பெற்றது. இப்பொழுது கோயிலுக்குள் வெள்ளெருக்கஞ் செடி தான் இருக்கிறது. இத்தலம் இப்பொழுது இராஜேந்திரபட்டினம் என்று வழங்குகிறது. திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகங்களை யாழில் இட்டு வாசித்த திருநீலகண்ட யாழ்ப்பாணர் அவதரித்த சிறப்புடையது. இவர் மரபில் வந்த பெண்தான் தேவாரத்திற்குப் பண் வகுத்தவர். உருத்திரசன்மர் வழிபட்டு ஊமைத்தன்மையினின்றும் நீங்கினார். உருத்திரசன்மரின்

உருவம் ஒன்றும் இங்கு இருக்கிறது. விருத்தாசலம் ஜெயங் கோண்ட சோழபுரம் செல்லும் கற்சாலையில் விருத்தாசலத் திலிருந்து தெற்கே 5-வது மைலில் உள்ள வேள்ளாற்றைக் காஸ்வே பாலத்தின் மூலம் கடந்து மேலும் மூன்று மைல் சென்ருல் இத்தலத்தை அடையலாம், சுவாமி-திருநீலகண்டர்; அம்மை நீலமலர்க் கண்ணியம்மை. கோயில் சிறியது. ஊரும் சிற்றூரே. திருக்குளத்தின் கரையில் இக்கோயில் அமைந் துள்ளது. திருஞானசம்பந்தர் ''படையார் தருபூத'' என்ற பதிகம் பாடிப் பரவியுள்ளார்.

திருக்கூடலையாற்றூர் :

இது மணிமுத்தா நதியும் வெள்ளாறு என வழங்கும் நிவா நதியும் கூடும் (சங்கமம் ஆகும்) இடத்தில் தென்கரையில் உள்ளது. எருக்கத்தம் புலியூருக்குக் கிழக்கே நான்கு மைலில் உள்ள ஸ்ரீ முஷ்ணம் சென்று அங்கிருந்து வடகிழக்கில் நாலு மைல் சென்ருல் இத்தலத்தை அடையலாம். இரு நதிகளும் கூடுமிடத்தில் இருப்பதால் இத்தலம் கூடலையாற்றூர் எனப் பெயர் பெற்றது. சுந்தரர் தெற்கேயிருந்து விருத்தாசலம் செல்லும்போது இத்தலத்திற்கு அண்மையில் வந்தார். அப் பொழுது இத்தலத்திறைவன் அந்தணவடிவுடன் சுந்தரர்க்குமுன் சென்ருர். சுந்தரர் அந்தணவடிவுகொண்ட இறைவனைத் திருமுதுகுன்றம் செல்லும் வழி எது என்று வினவினுர். அந்தணர் இதுதான் கூடலையாற்றூர் செல்லும் வழி என்று அறிவித்து உடனே மறைந்துவிட்டார். சுந்தரர் இறைவன் திருவருளை வியந்து இத்தலத்திற்குச் சேன்று 'வடிவுடைமழு வேந்தி'' என்ற பதிகம்பாடிப் பரமனைப் பரவினுர். ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ''இவ்வழிபோந்த அதிசயம் அறியேன்'' என்று குறிப்பிட்டுள்ளார். ஊரும் கோயிலும் சிறியவை. வழி காட்டியதனுல் சுவாமி நெறி காட்டும் நாயகர் என்ற பெயருடன் விளங்குகிருர். அம்மை - புரிகுழலம்பிகை என்று வழங்கப்படு கிருர். நடுநாட்டுத்தலம் 22ல் மூன்ருவதாகத் திகழ்வது இத் தலம்.

திருநெல்வெண்ணெய் :

இத்தலம் இப்பொழுது ''நெய்வேணை'' என வழங்கு கின்றது. உளுந்தூர்ப்பேட்டையிலிருந்து வடமேற்கே 6 மைலில்

உள்ள ஆதனூர்வரை கார் செல்ல வசதியான சாலையுள்ளது. அதை அடுத்து மூன்றுமைல் மணல்சாலையில் வண்டி மூலமோ நடந்தோ சென்றுதான் தரிசிக்கவேண்டும். கோயில் பழுதுற்ற நிலையில் உள்ளது. சனகர் சனற்குமாரர் முதலியோர் பூசித்துப் பேறு பெற்ற சிறப்புடையது திருஞானசம்பந்தர் " நெற்றியோர் கண்ணுடை நெல்வெணே " என்ற திருப்பதிகம்பாடிப் பரவி யுள்ளார். சுவாமி - வேண்ணெணயப்பர், அம்மை - நீலமலர்க் கண் அம்மை. நடுநாட்டுத்தலம் 22ல் ஐந்தாவது தலமாகத் திகழ்வது இத்தலம்.

நெற்றியோர் கண்ணுடை நெல்வெணே மேவிய
பெற்றிகோள் பிறைநுத லீரே.
பெற்றிகோள் பிறைநுத லீர்உமைப் பேணுதல்
கற்றறி வோர்கள்தம் கடனே.

—திருஞானசம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்,

மதிப்புரை :

திருவெம்பாவை - திருப்பள்ளியெழுச்சி

[உரைவிளக்கம்]

[உரை ஆசிரியர்; திரு, ரா. சண்முகசுந்தரம் செட்டியார் B.A சைவசித்தாந்த மகாசமாசஜ வெளியீடு; 14, வாரன்ரோடு, மயிலாப்பூர் சென்னை, 4. பக்கங்கள் 160; விலை. ரூ, 1—25,]

திருவெம்பாவை திருப்பள்ளி யெழுச்சிக்குப் பல்லாண்டு களாகச் சமய உலகிற்குப் பழக்கமான மெய்யன்பர் திரு. செட்டியா ரவர்கள் வகுத்துள்ள மிகத் தெளிவான உரை விளக்கம் இது. திருவெம்பாவை பற்றிய விளக்கக் குறிப்பைத் தோற்றுவாயிற் காணலாம். எளிய நடையில் பல மேற்கோள்கள் துலங்க. தமிழ் மணம் கமழக் கமழ இவ்வுரை மலர்ந்துள்ளது. மணிவாசகரது திருவுள்ளத்தோடு தோய்ந்து தோய்ந்து பழகிய உரையாசிரியர் நல்லறிவுக் கனிவை இவ்வுரை முற்றும் கண்டின் புறலாம். பண்டித மணியவர்கள் எழுதிய கதிர் மணிவிளக்க உரையோடொத்த பெருஞ் சிறப்புடையதாக இச் சண்முக விளக்கப் பேருரை, திகழ் கின்றது எனச் சுருக்கமாகக் கூறலாகும்; அறிவுலகு பெறுக; கற்க; இன்புறுக; உய்க.

சொ, சிங்காரவேலன் B. A.

ஞானப்பிரகாசமாலை

வித்துவான். சிரோமணி, திரு. வி. சபேசன்

தருமையாதீன முதற்குரவர் பாடிய நூல்கள் எட்டு. அவை இறைவனது எண்குணங்களையும் விளக்குவனபோல் அமைந்துள்ளன. அவ்வெட்டு நூல்களையும் பண்டாரசாத்திரம் முதல் தோகுதியாக உலகோர் உய்யும் வண்ணம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் வெளியிட்டருளியுள்ளார்கள். அவ்வெட்டு ஞானப்பனுவல்களுள் ஒன்று ஞானப்பிரகாசமாலை. இறைவன் திருவருளுணர்த்தியவண்ணம் குருஞானசம்பந்தருக்குத் திருவருள் நோக்கமும் ஞானதீக்கையும் புரிந்து ஆன்மார்த்த மூர்த்தியாக ஸ்ரீ சோக்கநாதர் பூஜையையும் எழுந்தருளச் செய்தவர்கள் கமலை ஞானப்பிரகாசர். அவருக்கு இப் பாமாலையைச் சூட்டி வணங்கினர் குருஞானசம்பந்தர். ஞானப்பிரகாசர்மீது பாடிய பாமாலை ஞானப்பிரகாசமாலை எனப் பேயர் பேற்றது. இந்நூலுக்குப் பண்டாரக்கலித்துறை என்று மற்றொரு பேயர் உண்டு. இது ஒரு தோத்திர நூல். தோத்திரம் என்பது ஒருவரது இயல்பான நற்குணங்களைப் பாக்களால் பாடுவது. வடமோழியில் குணவானிடமுள்ள குணங்களை இசையுடன் கூறுதல் தோத்திரம் என்பர். प्रगीत मन्त्रसाध्यगुणि निष्ठ गुणाऽभिधानं स्तोत्रम् ।

இந்நூலிலுள்ள பாடலின் தோகை முப்பத்தாறு. சைவ சமயத்தில் கூறப்பேறும் தத்துவங்கள் முப்பத்தாறு. இறைவன் இம்முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்தவனாகவும் அவற்றின் போருளாகவும் விளங்குகிறான். அதுபோல ஞானப்பிரகாசரும் முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்தவராகவும் அவற்றின் போருளாகவும் விளங்குகிறார் என்பவற்றை விளக்குவனவாக அமைந்திருக்கின்றது இப்பாமாலையின் பாடல்தோகை. இந்நூல் குருஞானசம்பந்தரின் குருபக்தியை விளக்குகிறது. இந்நூலால் இவர் தமது குருவின்மீது கோண்ட பேரன்பு புலனாகின்றது. सर्वं शिवमयं जगत् என்பதுபோல் सर्वं गुरुमयं जगत् என்ற

கோள்கையுடையவர் இவர் என்பதையும் உணர்கிறோம். இவரது குருபக்தியை அளவிட்டுக் கூறமுடியாது. குருஞானசம்பந்தர் தமது சிந்தனே, செயல், சோல் எல்லாம் குருவருளால் நிகழ்வன என்று எண்ணுகின்றவர். தாம் இருக்கும்போழுதும், எழுந்து நடக்கும்போழுதும், தமக்குப் பசிவந்தபோழுதும், பிணிவந்த போழுதும் தம்மை அந்தகன் தோடர்ந்தபோழுதும் ஞானப் பிரகாசன் என்றே கூறுவதல்லாது வேறு சோல் கூறமாட்டேன் என்கிருர்.

“ கிடந்தாலு ஞானப்பிர காசனேன் பேன்கிடந் தேளழுந்து
படர்ந்தாலு ஞானப்பிர காசனேன் பேன்பசி யோடுபிணி
அடர்ந்தாலு ஞானப்பிர காசனேன் பேன்அந்த அந்தகனுர்
தோடர்ந்தாலு ஞானப்பிர காசனேன் பேன்பினேச் சோல்
இல்லேயே ”

என்ற பாடல் நமக்கு இதை நன்கு அறிவிக்கின்றது.

சிந்தை தேளிவு அடையவேண்டுமாஞல் குருவின் திரு மேனியைத் தினமும் தரிசித்தல் வேண்டும். குருவின் திருநாமத்தை எப்போழுதும் சோல்லுதல்வேண்டும். அவரது உபதேசமோழிகளேக் கேட்டல்வேண்டும். அதுமட்டும் போதாது. அவரது திருவுருவையும் இடைவிடாது சிந்தித்தல்வேண்டும் என்ற திருமுலர் திருவாக்கிற்கு இலக்கியமாக விளங்கிஞர் குருஞானசம்பந்தர்.

குருவே சிவம்

இறைவன் மானுடச்சட்டை தாங்கிவந்து அருள்சேய்கிருன். குருவே இறைவன். நான்கு வகையான சத்திநிபாதங்களுக்குத் தக்கபடி இறைவனே குருவின் வடிவங்கோண்டுவந்து எல்லா உயிர்களுக்கும் அருள்சேய்கிருன். இக்கருத்தை,

आचार्यमूर्ति मास्थाय चतुर्धा शक्तिपाततः ।
भगवाननुगृह्णाति स एव सकलानपि ॥

என்ற சுலோகம் நன்கு விளக்குகிறது.

குருவை மனிதனுகவும், மந்திரத்தை எழுத்தாகவும், திருக்கோயிலில் உள்ள இறைவடிவத்தைக் கல்லாகவும் எண்ணுகின்றவர்கள் நரகத்தை அடைவார்கள் என்கிறது ஆகமம்.

यथागुरौ नृबुद्धिं वै मन्त्रेचैवार्ण बुद्धिकृत् ।
प्रतिमासुशिला बुद्धिं कुर्वन्तो यान्त्यध स्तमः ॥

குருவை இறைவனுக எண்ணுதவர் நரகத்திற்குச் செல்வர். இக்கருத்தை "சற்குரு தனை ஈசன் என்று எண்ணுதார் நரகிற்குடிமக்களே" என்று கூறுகிருர் குருஞானசம்பந்தர். மாணிக்கவாசகரும் நரகிற்குச் செல்லும் உயிர்களைக் காப்பவன் குருவே என்கிருர்.

"கொடுமாநகரத்து அழுந்தாமே காத்து ஆட்கொள்ளும் குருமணியே" கயிலைவாசனே குருவாக வந்து ஆட்கொள்கிருன். ஆட்கொள்கின்றபொழுது உயிர்களுக்கு ஏற்றவண்ணம் அருள் செய்கிருன். உயிர்களிடத்துள்ள பாசம் கெடுத்து பசுத்துவம் போக்கிப், பராபரத்தில் நேசம் கொடுத்து நிறுத்துகிருன். அவன் அருள்கொண்டுதான் அவனைத் தொழுகின்ருேம். ' அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்ற பகுதி ஈண்டு ஒப்பிட்டுணதற்குரியது. மேலும் மாணிக்கவாசகர், "ஈறிலாத நீ யெளியை யாகிவந்து ஒளிசெய் மானுடமாக நோக்கியும்" என்கிருர். குருஞானசம்பந்தர். 'கயிலைவாசன் செழுமதிமானும் மழுவும் மறைத்து வந்ததேசன் கமலையுள் ஞானப்பிரகாசன் நம்தேசிகனே" என்றும் 'கூடலில்வாழ் ஞானசம்பந்த போதனே" என்றும் கூறுகிருர்.

குருவை இறைவனுக எண்ணிய காரணத்திஞல்தான் இறைவன் திருவிளையாடல்களையெல்லாம் இவர்மீது ஏற்றி 'புர மூன்றெரித்த வல்லாய்? கமலையுள் ஞானப்பிரகாச மகிப" என்கிருர்.

இறைவன் உயிருக்குயிராய் உள் நின்று உணர்த்தும் ஆற்றலுடையவன். இறைவன் குருவாகவே வந்து உயிர்களுக்கு அருள் செய்கின்ருன் என்பதை அருணகிரிநாதர் "குருவாய் வருவாய் அருள்வாய் குகனே" என்று கூறுகிருர்.

(தொடரும்)

செய்திகள்

வட இந்தியத் தலயாத்திரை :

தருமையாதீனம் 25 ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானமவர்கள் வடநாட்டிலுள்ள காசி முதலிய தல யாத்திரைக்கு 12—6—61 அன்று எழுந்தருளினார்கள். அதற்கு முன்னதாகத் தருமையாதீனத்தில் ஸ்ரீ ஞானபுரீசுவரர்க்கும் ஸ்ரீமகாலட்சுமி துர்க்காதேவிக்கும் சிறப்புவழிபாடுகள் நடந்தன. 12—6—61ல் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களது ஆன்மார்த்த மூர்த்தியாகிய சோக்கநாதப் பெருமானுக்கு சிறப்பு வழிபாடும், மகேசுவரபூஜையும் நிகழ்ந்தன.

வேளூரில் :

வசந்தோற்சவம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தியநாத சுவாமிக்கு 20-5-61. திங்கட்கிழமை முதல் 29—5—61 திங்கட்கிழமை முடிய உள்ள நாட்களில் வசந்தோற்சவம் நடைபெற்றது. விழாநாட்களில் இன்னிசை நிகழ்ச்சிகளும் சமயச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

21—6—61. ஞாயிற்றுக்கிழமை மதுரை திரு. சோமசுந்தரம் குழுவினர் பாட்டு, 22—6—61. திங்கட்கிழமை திருமதி லலிதாகணேசன் குழுவினர் பாட்டு, 23—6—61. செவ்வாய்க்கிழமை திரு. சம்பந்தம்பிள்ளை திரு. தக்ஷிணாமூர்த்தி குழுவினர் வயலின், 24—6—61. புதன்கிழமை திருமருகல், திரு. சோமசுந்தரம் குழுவினர் பாட்டு, 25—6—61. வியாழக்கிழமை

கும்பகோணம், திருமதி. இராஜலக்ஷ்மி குழுவினர் பாட்டு, 26—6—61. வெள்ளிக்கிழமை திருப்பனந்தாள், திரு. சண்முக சுந்தரம் குழுவினர் வீணை ஆகிய இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

27—6—61. அண்ணுமலைப் பல்கலைக்கழகம், கல்வெட்டு ஆராய்ச்சி விரிவுரையாளர், கல்வெட்டாராய்ச்சிக் கலைஞர் வித்துவான், திரு, வை. சுந்தரேசவாண்டையார் 'கந்தன்கருணை' என்ற பொருளிலும், 28—6—61. ஞாயிற்றுக்கிழமை சிதம்பரம் பச்சையப்பன் உயர்பள்ளித் தமிழாசிரியர் திரு. ச. சேதுசுப்பிர மணியபிள்ளை ' சமயவாழ்க்கை ' என்ற தலைப்பிலும், 29-5-61. திங்கட்கிழமை நாகப்பட்டினம், தேசீயஉயர்பள்ளி தமிழாசிரியர்' தருமையாதீனப்புலவர், வித்துவான், திரு. வை. மு. சண்முக தேசிகர் ' திருக்குறிப்புத்தொண்டர் ' என்ற பொருளிலும் சொற் பொழிவுகள் நிகழ்த்தினர்.

ஆச்சாள்புரத்தில் :

பிரமோற்சவம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத்தியாகராஜ சுவாமி தேவஸ் தானத்தில் 20—5—61 சனிக்கிழமை முதல் தொடங்கி 29—5—61 திங்கட்கிழமை முடிய உள்ள நாட்களில் பிரமோற்ச வம் சிறப்பாக நடைபெற்றது. 31—5—61 புதன்கிழமை ஸ்ரீ தோத்திரபூர்ணும்பிகா சமேத திருஞானசம்பந்த சுவாமிக்குத் திருக்கல்யாணமும் புஷ்பப் பல்லக்குத் திருவுலாக்காட்சியும், திருஞானசம்பந்தர் ஐக்கிய உற்சவமும் நிகழ்ந்தன.

விழா நாட்களில் சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. ஐக்கிய உற்சவத்தன்று திருமுறைவிழா நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அருளால் தேவார வகுப்பு மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. பண் ணிசைவாணர்களின் திருமுறைப் பாராயணத்தோடு திருமுறை கள் யானைமேல் ஒப்பனை செய்யப்பெற்று வீதியுலாவாகக் கொணரப் பெற்றன.

திருவாரூரில் :

ஸ்ரீ தியாகராஜசுவாமிக்கு முசுகுந்த சகஸ்ரநாம

அர்ச்சனை

திருவாரூர் ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ தியாகராஜசுவாமிக்கு தருமையாதீனம் இராஜன்கட்டளை சார்பில் 19—5—61 வெள்ளிக்கிழமை விசேஷ ஆராதனைகளும் முசுகுந்த சகஸ்ரநாம அர்ச்சனையும் நடைபெற்றன ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானமவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். அன்பர்கள் பலர் திரண்டுவந்து வழிபட்டு உய்ந்தனர். அன்பர்களுக்குப் பிரசாதம் முதலியன வழங்கப்பட்டன.

திருக்குவளையில் :

அறநிலைய அமைச்சர் விஜயம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்துக்குச் சொந்தமான திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்திற்கு 16—6—61. வெள்ளிக்கிழமையன்று சென்னை அறநிலைய அமைச்சர் நல்லறங்காவலர் கனம், திரு. M. பக்தவத்சலம் B. A.. B. L., அவர்கள் விஜயம் செய்தார்கள். தேவஸ்தானத்தில் கட்டளை விசாரணை சுவாமிகள் அவர்களாலும் சூபரின்டெண்ட் அவர்களாலும் கோயில் மரியாதைகளுடன் கனம் அமைச்சர் அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. எல்லா சந்நிதிகளிலும் தரிசனம் செய்து வைக்கப்பட்டது.

எதிர்காலம் ☞	கே. முத்துஜோதிடர்

(பிலவஞ ஆடிமீ 1உ முதல் 32உ முடிய)
(16—7—61 முதல் 16—8—61 முடிய)

ஸ்ரீ பிலவஞ ஆடிமீ 1உ ஞாயிற்றுக்கிழமை உதயாதி நாழிகை 13 விநடி 58க்கு கடகத்தில் ரவி தக்ஷிணாயன புண்ணிய காலம்.

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை $\frac{1}{4}$

அசுவதி நக்ஷத்திரம் நான்குபாதங்களும் சுபமிராது. பரணி 1, 2 பாதங்கள் கிரஹ சுகத்தையும் தொழில் மேன்மையையும் ஆடை ஆபரணச் சேர்க்கைகளையும் தரும். பரணி 3, 4 பாதங்கள் சரியாய் நடவாது. கார்த்திகை முதல்பாதம் சிறு நஷ்டங்களையும் தொழில் கவலையையும் குடும்பத் தொல்லையையும் காட்டும். வெள்ளி, சனி சுபமாகும்.

2. ரிஷபம். கார்த்திகை $\frac{3}{4}$, ரோஹிணி, மிருகசீர்ஷம் $\frac{1}{2}$.

கார்த்திகை 2, 3, 4 பாதங்களும் ரோஹிணி நான்கு பாதங்களும் அதிக கஷ்டநஷ்டங்களைக் காட்டும். தெய்வபலம் ஒதுங்கி நிற்கும். மிருகசீர்ஷம் 1, 2 பாதங்கள் வித்யாவிருத்தி. இடம் மாறி தொழில் மேன்மை. இல்லறசுகம் இவைகளைத்தரும். புதன் வியாழன் சுபமாகும்.

3. மிதுனம். மிருகசீர்ஷம் $\frac{1}{2}$, திருவாதிரை, புனர்பூசம் $\frac{3}{4}$.

மிருகசீர்ஷம் 3 4 பாதங்கள் மிச்ர பலனைத்தரும். ஈதி பாதைகள் அதிகமாகும். செய்காரியங்களில் தவக்கம் காட்டும். திருவாதிரை நான்கு பாதங்களும் வீண் அலைச்சல்களைத் தரும். வரவுக்கு மிஞ்சின செலவு ஏற்படச் செய்யும். புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள் வியவஹார சமாதானத்தைக் கொடுத்து சத்ருக்களை சரணடையச்செய்யும், காரிய சித்தியாகும் புதன், வெள்ளி சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம், ஆயில்யம்.

புனர்பூசம் நான்காம்பாதம் வித்தியா அபி விருத்தியாகும். சிரத்தை மேதைகளை விருத்திபண்ணும் பூசம். நான்குபாதங்களும் புதிது புதிதாக தொழில் முறைகளை விருத்தி செய்து உலக பிரஸித்தியை உண்டுபண்ணும். ஆயில்யம் நான்குபாதங்களும் கடன் தீரும், வியவகாரம் ஜெயிக்கும். நூதனத்தொழில்

ஏற்படச்செய்யும். நினைத்ததெல்லாம் கைகூடும். புதன், வியாழன் சுபமாகும்

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

மகம் நான்கு பாதங்களும் இருப்பிடத்திலேயே உயர் பதவியைக் கொடுக்கும். மேலோர் பெரியோர் அன்பு கிடைக்கச் செய்யும். எங்கும் கீர்த்தி ஏற்படும். பூரம் நான்குபாதங்களும் உத்திரம் முதல்பாதமும் அதிக செலவுகளைத்தந்து ஆரோக்கியக் குறைவையும் உண்டுபண்ணும். தூரதேசத்திலிருந்து அழைப்புப் பத்திரம் வரும். காரியங்கள் விக்னம் அடையும். சனி, செவ்வாய் சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

உத்திரம் 2, 3, 4 பாதங்கள் தொழில்விருத்தியைத் தரும். நஷ்டமான பொருள்கள் தானாக வந்துசேரும். வியாபாரம் ஓங்கும். தெய்வபலம் முன்நிற்கும். ஹஸ்தம் நான்கு பாதங் களும் கிரகசுகத்தைத் தந்து அசாத்தியமெல்லாம் சுலபமாக சாதித்துத்தரும். என்றும்கண்டிராத அத்புதங்களையும்தெய்வீகத் தன்மைகளையும் தோன்றச் செய்யும். நினைத்தபடியெல்லாம் சாதித்துத் தரும். உலகப் பிரசித்தியை உண்டுபண்ணும். சித்திரை 1, 2 பாதங்கள் கிரகசுகத்தைக் கொடுத்து புத்ரீ புத்ர விவாஹ சுபங்களுக்குரிய சூசனைகளை உண்டுபண்ணும். சகல காரியமும் சித்திக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

சித்திரை 3, 4 பாதங்கள் மிச்ரமாய் நடக்கும். அதிக செலவினங்களை ஏற்படச்செய்யும். பந்து மித்திரர்களிடமிருந்து துக்கசமாசாரக் கேள்வி வரும். சுவாதி நான்கு பாதங்களும் விசாகம் 1, 2, 3 பாதங்களும் பெரிய காரியங்களில் ஈடுபடச் செய்து மகத்தான வெற்றியைத் தரும். நஷ்டமான பொருள் வந்துசேரும். நூதன கிரக பூமி வாங்கல் ஏற்படச்செய்யும். வியவகாரம் ஜயிக்கும். புதன் வெள்ளி சுபமாகும.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$ அனுஷம், கேட்டை

விசாகம் நாலாம் பாதம் சுபமிராது. கவலையை உண்டு பண்ணும். அனுஷம் நான்கு பாதங்களும், கேட்டை நான்கு பாதங்களும் கிரக சுகத்தையும், தன தான்யப் பெருக்கத்தையும் தரும். தொழில் ஓங்கச்செய்யும். எங்கும் நிறைந்த கீர்த்தி

ஏற்படும். ஆரோக்கியம் உண்டாகும். மனம் சந்தோஷம் அடையும். புதன், வெள்ளி சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம - உத்திராடம் $\frac{1}{4}$

மூலம் நான்கு பாதங்களும் சுபமிராது. கவலைகளைத் தரும். பூராடம் நான்கு பாதங்களும் ரொம்பவும் சிக்கலான உபாதிகளை உண்டுபண்ணும். கலகம் காட்டும். உத்திராடம் முதல் பாதம் குடும்ப சுகததையும், ஆரோக்கியத்தையும் தரும். கிரய விக்கிரயம் ஏற்படச்செய்யும். சனி, செவ்வாய் சுபமாகும்.

10. மகரம். உததிராடம் $\frac{3}{4}$, திருவோணம் - அவிட்டம $\frac{1}{2}$

மகர ராசி 9 பாதங்களும் உத்தியோக உயர்வு, ஜயம், லாபம், இடம் மாறல் மனத்திற்கு மிகுந்த சந்தோஷம், ஆரோக்கியம், கிரகசுகம், எல்லா நனமைகளையும் தெய்வீகத்தன்மை பிரகாசித்தல் முதலிய சுபங்களையும் தரும். புதன், வெள்ளி சுபமாகும்.

11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

அவிட்டம் 3, 4 பாதங்கள் சுபத்தையும், கிரக சுகத்தையும் உண்டுபண்ணும். புத்ரீ புத்ராதிகளால நன்மை உண்டாகும். சதயம் நான்கு பாதங்களும், பூரட்டாதி 1, 2, 3 பாதங்களும் மிச்ரபலனைத் தரும். தொழில் ஓங்கும். நூதன வியாபாரம் ஏற்படச்செய்யும். அத்துடன் கெட்ட சகவாசமும், துர்புத்தியும் கூடவே நிற்கும். சனி, செவ்வாய் சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி - ரேவதி.

பூரட்டாதி 4ம் பாதம் சுபசந்தோஷத்தைத் தரும். உத்திரட்டாதி நான்கு பாதங்களும் உத்தியோக லாபத்தையும், பெரியோர் சிநேகத்தையும் கொடுக்கும். ரேவதி நான்கு பாதங்களும் உத்தியோக உயர்வு, ஆரோக்கியம், காரியசித்தி கிரய விக்கிரய லாபம் மனதிற்கு சந்தோஷம் எல்லாம் தரும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

குறிப்பு :- மேற்படி மாதம் உலகில் அமைதி குறையச் செய்யும். ஒவ்வொருவருக்கும் நான்தான் பெரியவன் என்கிற எண்ணம்தோனறும். கோபதாபங்கள்அதிகமாகும். இயற்கைகள் சிலவிடங்களில் அதிக தொந்தரவையும், சிலவிடங்களில் பற்றுக்குறைகளையும் உண்டுபண்ணும். துர்தேவதைகளின் ஆதிக்யம் ஓங்கும். நடைமுறைகளைக் கவனித்தால் கடவுள் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனம் செய்துவருவதைப்போல் தோற்றமுண்டாகும். ஸஜ்ஜனங்களாலும், ஸாதுக்களாலும் உலகம் காப்பாற்றப்படும்.